ப்ரம்மவித்தியா

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ் மீ ௩௰ உ சிதம்பரத்திலிருந்து பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம்—க] கஅஅஎ ௵ மே மீ ௩௰- உ [இலக்கம். ௰உ

விஷயா:	பத்ரஸங்க்யா
கஶ்சிதுபந்யாஸ: (ஸம்பாதகீய:)	௱எஎ
ஸ்ரீ வைகாநஸாந்ப்ரதி ப்ரத்யுக்தி:.	௱அக
பாத்ரிணாசார்ய்ய பாடஶாலாயாம் பாலிகாப்ரேஷணா த்ஸம்பவதநர்த்த:.	௱அரு
ஸம்ஸ்க்ருதபாஷா (ஸம்பாதகீய:)	௱அஎ
தர்மகரோதுபக்ஷீயப்ரஶ்நாநாம் ப்ரத்யுக்தி:.	௱கூ௰
ஶங்கரமதபக்தப்ரியாய ப்ரத்யுக்திப்ரதாநம்.	௱கூக
தோடகாசார்ய்யசரித்ரம்.	௱கூ௨

அநுபந்தே. வைதிகஸித்தாந்தாவளீ

விஷயங்கள்	பக்கம்
ஓர் உபந்நியாஸம்.	௱எஎ
ஓர் வைகாநஸர்க்குவிடை	௱அக
பாதிரிமார்பாடசாலையில் பெண்களை அனுப்புவதால் நேரிடும் அனர்த்தம்.	௱அரு
ஸம்ஸ்கிருதபாஷை [இதிகாசம்]	௱அஎ
தர்மங்கரோதுபக்ஷியார் வினாக்களுக்கு விடை.	௱அகூ
சங்கரகுருபக்தப்பிரியருக்கு அளிக்கும்விடை	௱கூ௨
தோடகாசாரியார்சரித்திரம்.	௱கூக

அனுபந்தத்தில்

வைதிகசிந்தாந்தாத்தினவளி. நம்மவர்கவனிப்பு.

வெளிப்புறத்தில்

ஸம்ஸகிருதபாஷாபிமானி எழுதியது.

பத்திராதிபர் தக்ஷிணயாத்திரை.

சந்தா விவரம்

	இந்தியாவிற்கு			இலங்கைக்கு		
௵ 1.இ	1	12	0	2	4	0
மா 6.இ	1	0	0	1	4	0
மூ 3.இ	0	9	0	0	10	0
காபி 1.இ	0	3	6	,,	4	,,

ரி பு கி தை த-

இப்புத்தகம் சென்னை பெத்து நாயக்கன்பேட்டை ஏகவல்லியம்மன் வீதி, மேலண்டைவாடை 6. கெ. வீட்டில் அத்வைத விவேக சமாஜத்தி லொருவரான தி. ரே. திருவேங்கடபிள்ளை யவர்களிடம் ரூபா 2௬ விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

[illegible]னம்.

நமது பத்திரி[illegible]வாறு சிதைந்துகிடக்கும் நம் முன்னோரின் பூ[illegible]ர சாஸ்திரங்களின் நிலைமையை வெளியிடவெழு[illegible]து. அவ்விதப் பத்திரிகையில் விதண்டாவாதிகளான [illegible]வைணவர் சைவர் வாதங்களுக்கு இடங்கொடுத்தால் பத்திரிகையின் பயன் நிறைவேறமாட்டாது. ஆதலின், இனிச் சைவ வைஷ்ணவ வாதத்தை ஏற்பட்ட [16] பக்கங்களிற் சேராமல், [4] பக்கங்களுள்ள அனுபந்தத்தில் வெளியிடுவோம். நம் தேசத்துப் பண்டிதர்கள் போகும் வழி பலர் அறிய வேண்டி இதுவிஷயத்துக் கிடங்கொடுத்தோம். பத்திராதிபர்.

சிதம்பரம்

ப்ரம்மவித்தியா யந்திரசாலையில்

விற்கப்படும் புத்தகங்கள்.

சர்மிஷ்டாவிஜயம்.	,,	௬	,,
பகவத்கீதார்த்த தீபிகை.	௨	,,	,,
ஆச்சரிய தர்ப்பணம்.	௬	அ	,,
அஷ்டாங்கயோகம்.	,,	௫	,,
ஆரியாதண்டகம். லக்ஷ்மிஸ்தோத்திரம்.	,,	க	,,
மகேஸ்வரதண்டகம்	,,	க	,,
சங்கர சரித்திரம்.	,,	,,	௬
ஆத்மாவும், சரீரமும்.	,,	க	,,
சகாதேவசாஸ்திரம்.	,,	க	,,
மனுமுறைகண்டவாசகம்.	,,	௨	,,
மாதர்நீதி.	,,	௬	,,
ஸ்ரீராமபத்திரவிஜயம்.	,,	8	,,
கிரந்தராமாயணவினாவிடை.	,,	3	,,
தெலுங்கு ராமாயணவினாவிடை.	,,	2	,,
நாகரம். நக்ஷத்திரமாலிகா.	,,	,,	6
நாகரம் ஸ்துதிஸங்கிரகம்.	,,	1	,,
ஸ்தோத்திராவளி.	,,	1	,,

இஃது சிதம்பரம் ப்ரம்மவித்தியா ப்ரெஸ்தலைவரால் பதிப்பித்து வெளிப்படுத்தப்பட்டது.

இந்து ட்ராக்ட் சொஸைட்டி.

சென்னை முத்தியாலுபேட்டை வீரப்பிள்ளை வீதியில் இந்துசமயிகள் சேர்ந்து, "இந்து ட்ராக்ட் சொஸைட்டி" என்னும் ஓர் சபை ஏற்படுத்தி, அதில் முன் ஏப்ரல் மாசத்தில் "கிறிஸ்துமத ஆபாசம், நாமும் பாவிகளா?" இத்தலைப் பெயர் பெற்ற ட்ராக்ட் ஒன்று 10000. வரையில் அச்சிட்டு எங்கும் பரவச் செய்து வருகின்றனர். இதற்கு உள்ளூரிலும் வெளியூரிலும் இருக்கும் அபிமானிகள் மெம்பராகச் சேர்ந்து அச்சபை விழுந்துவிடாமல் என்றும் நிலைத்திருக்க யாவரும் கைகொடுக்கவேண்டும். பொருள் சகாயமும் அத்தியாவசியமாகும். அபிமானிகளை நம்பியே அச்சபை நியமிக்கப்பட்டது. கைசோரவிடக் கூடாது. அவமான முண்டாகும். எதிரிகள் பரிகசிப்பார்கள். அச்சபையார் இனி மாசமாசம் சிறு பத்திரம் பிரசுரஞ் செய்யவும் கிறிஸ்துமத கண்டன புத்தகங்களும் பிரசுரஞ் செய்வதனோடு, பிரசங்கம் புரியவும் ஆலோசிக்கின்றனர். நமது சமயிகள் ஐக்கியமாகி உட்சண்டைசெய்வ தொழிந்து யாரும் ஒருமனமாய் நின்று தளராமல் முயன்று எடுத்த சற்காரியத்தை முடிப்பார்களென எதிர்பார்க்கும், ஓர் அபிமானி.

ப்ரம்மவித்தியா பத்திராதிபருக்கு.

ஐய,

உலகத்தில் சம்ஸ்கிருதபாஷை பெருமையுடைத் தென்பது யாவர்க்குமொப்ப வமைந்ததோருண்மை. பரதகண்டத்தாரால் பல்லாண்டு பல்லாண்டாகக் கைக்கொள்ளப் பட்டுச் சம்ஸ்கிருதபாஷையிற் கூறப்பட்டதையெடுத்துரைப்பதிற் பயனென்னை? ஆங்கில நூற்கடல் படிந்தோருள் முன்னோரெல்லாம் பூரியரே யென்ற கொள்கையுடையார் மாட்டு யாங்கூறியது குறை முன்னெதிர்ப்பட்ட பூனைவீ பட்டபாடுறுவது திண்ணம். ஆயினும் அவரும் மேலைநாட்டு மேதாவியரான ஆங்கில ஜர்மானியராதியோரால் இஞ்ஞான்று சம்ஸ்கிருதம் மிக்கசெம்மற்றெனக் கொள்ளப் படுகின்றதென்பதை மறந்தும் மறுக்கவொட்டார். அத்துணைச் சிறப்பு வாய்ந்த சம்ஸ்கிருதபாஷை நமது பரதகண்டத்திலேயே இறந்துபடுவதற்குக் காரணம் அதனுள் சத்தியரூபமான நூல்கள் பலவில்லாமையே யென்று எனது புல்லறிவிற்குப் புலப்படாநின்றது. ப்ரம்மவித்தை தோன்றியஞான்றே இக்கூறப்பட்ட குறைவுபாடு ஒருவாற்றான் நிறைவு பெறுமென்று கார் கண்ட மயிலெனக் களித்து நின்றேம். அக்களிப்பிற்கு நெடுநாட்குறைவு நேர்ந்திலது. இஞ்ஞான்றுன் தோன்றிய வதனுன் காலம் பெறவேண்டி நிறைவு பெறீஇப விதியுள் ஒழுகாநின்றேன். முகவுரை யுரைக்கவே முழுமளந்தானென்று ஆசிரியர் என்னைக்குறை கூறுதொழிக.

சம்ஸ்கிருதபாஷையின் சரித்திராதிகள் ஆங்கில ஜர்மானிய நாட்டுப் பண்டிதர்களாற் கிளக்கப்பட்டுளவன்றி, அதன் கிழவோராய் அதன் பண்டையு முள்ளீட்டையுந் தெள்ளிதினுணர்ந்த பரதகண்டத்தாரால் கிளக்கப்படவில்லை. அதனானேயே ஆங்கில ஜர்மானியரால் நாட்டப்பட்ட சித்தாந்தங்கள் நம்புதற்கேலாதிருக்கின்றன. நீவிர் நுமது பத்திரிகையிற் பெருமையுடைத்தான வேதம், புராணம் முதலிய வற்றின் உள்ளீடுகளையெடுத்து உள்ளங்கை நெல்லிக்கனிபோற் புலப்படுத்துவான்புக்கபோதே நாமெல்லாம் நல்குரவு தீர்ந்தேம் தீர்ந்தம் என்று இணங்கையா நேர்ந்தொழிலரானேம். நமரங்காள் நுமது களிப்பெல்லாம் நீர்க்குமிழி யென்று பிறர் நகையாடியதற்கேற்ப நீயிருமின்று வேதம், புராண மிரண்டுடனேவே கீர்வாணபாஷையைப் பற்றிக் கூறவான் போந்ததை யொழித்துவிட்டீர். தலையளி செய்து தலைவன் பரத்தையிற் பிரியப் பள்ளியிடத்தே புலம்புற்ற தலைமகளென யாமும் வாடாநின்றேம். செவ்வணி விடுக்கத் தலைமகன் உலகியலாறோர்ந்து தலைமகண் மாட்டுத்திரும்பிய தென்ன இத்திருமுகமகாரணமாக நீயிரும் நுமது மாண்டொழில் கைக்கொண்டு நமது குறையிரவு தீர்மின். இதுவேயாம் நும்மை வேண்டாநிற்பது. இன்னுமொன்றுண்டு; அதற்குஞ்செவிசாத்தியருள்க. நுமதரும் பெரும் பத்திரிகையை நாத்திக ஆத்திக மத சம்வாதத்திற்கே முழுதுங்கொடுத்து விட்டீர். அதனுன் லோகோபகாரமான பிரபல விடயங்கள் பேச இடம் பெறுதொழிந்தன. இந்நாத்திக ஆத்திக மதசம்வாதம் வேதந்தோன்றியஞான்றே உண்டென்று யாநுங்கட்குக் கூறவேண்டா. அன்றி உலகுள்ளளவும் அதுவுமுளதாகும் என்று விரித்துரைக்கவும் வேண்டா. பின்னை என்பயன் கருதியோ தர்க்க குதர்க்கங்களில் வீண்காட்சழிப்பது? நாத்திகரு மாத்திகரும் லோகோபகாரமான பத்திரிகைகளைத் தமது வாதங்கட்குவாயிலாக்காது கைப்பொருள் கொண்டு சஞ்சிகை வாயிலாகத் தர்க்கஞ் செய்வராயின் புத்திமான்களெனப்படுவர். இனி அவர்களை விட்டொழித்து உபநிடதம், யோகம், சாங்கியம், பிரமசூத்திரம் முதலிய நூல்களையும், அவற்றின் ஆசிரியர்களுடைய சரிதங்களையும், அவ்வவ் நூற்பொருளையும், அவை தோன்றிய காலத்தையும், அவை தோன்றற்குக் காரணமாயுள்ளவற்றையும், அவை தோன்றியதனாற் காரியப்பட்டவற்றையும், மற்றும் அவற்றோடு வேறனையாற் சம்பந்தமுள்ளவற்றையும், எடுத்து விரித்துரைக்குமாறு வேண்டுகின்றேம். இதனுன் இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களையும், மேகசந்தேசம், பட்டிகாவியம் முதலிய காவியங்களையும், சாகுந்தலம் முதலிய நாடகங்களையும், அவற்றின் பேதங்களையும் ஒழித்தேமென்று கொள்ளற்க. சம்ஸ்கிருதபாஷையில் நூலென்றுள்ள யாவற்றையும் பற்றியே அறிய விரும்புகின்றேம். பண்டைய ஆரியர்களின் மதம் அரசியல் முதலியவற்றையே முக்கியமாய் அறிய வேண்டும். சுருக்கமாய்ச் சொல்லின், ஜர்மானியரான ஆசிரியர் வீபர் செய்ததுபோல் நீங்களுஞ் செய்வீர்களென வேண்டுகின்றேம். அங்ஙனமியற்றப் போந்த வல்லமை யுள்ளார் நீரேயென்பது எம்மனத்துணிபு. எம்வேண்டுகோள் அளிக்கப்படுமென்ற வெண்ணத்தோடு எதிர்பார்த்து நிற்கின்றேன்

இங்ஙனம், ஸம்ஸ்க்ருதபாஷாப்பிமானி.

விஜ்ஞாநவிஷாணிவ்ருஷப்ரஶ்நப்ரதிவசநம்

ஶ்ரீமத்விஜ்ஞாநவிஷாணிணோ வஸந்தவேதிகாயாம் (நாக வம்பர்) விஜ்ஞவிசிதப்ரவசநாநு, கஶ்சிஜ்ஜிஜ்ஞாஸாநவஸ்துவிஜி தீவஸாவ்ருகோவ்ருப்ருக்ஷம் கவஶேகஸ்ரீவாதீயம் ஜந்துவஜ்ஞநுஜவவிக்ஷவஷஸவாகரோதி. ஸஶ்சயதி வாஸரீ பாவேதிகாயாமதிநாமயெயொவிகம்விஷயம் கஸ்ய விவதிவஹநிகாரணாந்மெவவாநவஸமெண நக்ஷத்ரகபொந. தத்ரநிஸமஜ்ஜவாயநதூஷஜ்ஜக வத்ராபிவாநாமெயவமெணநாமவ்ருகபநாந ஹ்ருஸ்யநமநதவ்ருகநம் கயவாஸவவஸஹாவ்யதா மெஹதாயங்கஸவிதஸஜிஜ்ஞாஸாநஸநாமெநவ்ருக பமநவிநவிஷாணிவத்ராயிவாநாம். கயவவிஶ்ரஶ்ருவமாப்ரஹவிவ்ராவஸம்பமெஜாவிஷயஸத்ரவிஷ்ணு கெ. கய[illegible]கஸுஹ்ருஸ்வஸம்ஸ்ருதமிராஸமெநாஜா மெபவவ்ருவ்ருதா, நமோவமெதஸஸாஜதி. யாகம் வெஜாஸவமொகவபிமதாஷாயநகஸ்ரீஜஸவாயஃ மவாவயஜயவ்யாகஶமெவஸ்ரீஸ[illegible]ஷாநாம் ஶொஷ ணாயவிஷஷா. கிவிக.

ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியா பத்திரிகை

பிரதி இங்கிலீஷ் மீ௴ ௧௰௨ சிதம்பரத்திலிருந்து பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம்—௧] ௧௮௮௯ மே மீ௴ ௧௰-௨ [இலக்கம். ௰௨

[illegible]

[illegible]

“ [illegible] ” இதி. [illegible]

ஓர் உபந்நியாஸம்.

[௱௬௰௯-ம் பக்கத்தொடர்]

அஃதாவது “இது முதலில் பிரமமாகவேயிருந்தது. அது ஒன்றாயிருந்துவிபவத்தைப்பெறாது, தமதுபெருமையைவிளக்கிற்று; அதுவே க்ஷத்திரியமெனப்படும். இந்திரன், வருணன், ஸோமன், ருத்திரன், பர்ஜனியன், யமன், மிருத்தியு, ஈசானன் இவர்கள் தேவதைகளுள் க்ஷத்திரியர் எனப்படுவார். அதனால் வைபவத்தைப் பெறாது, வைசியர்களைச்சிருஷ்டித்தது. தேவதைகளுள் வைசியர் கணக்கிடப்படும். வசுக்கள், ருத்திரர், ஆதித்தியர், விசுவதேவர், மருத்து, என்பவர்கள். பிறகு வைபவம்பெறாது; அதுசூத்திரவருணத்தைச்சிருஷ்டித்தது. இவன்பெயர் பூஷா. இங்கு காணப்படும் எல்லாப் பிரபஞ்சங்களையும்விருத்தி செய்வதே பூஷா என்கிறதொழில். அதைக்கொண்டே சூரியன் பூஷா எனப்படுவான்,, என்பதாம். [புஷ் வடமொழிப்பகுதி- விருத்திசெய்வதெனப் பொருள்படும்.] இவ்விடத்தில் தேவதைகளிலும் நான்கு வருணங்கள் உண்டென வெளியாயிற்று. இவ்விதமே வேதங்களைக் கற்றுணர்ந்தபிராமணர்களும், முதலில்பிராமணங்கள் [வேதங்களின்மேலார்பாகம்] உண்டான பொழுதே, தேவர்கள் என்று சொல்லப்பட்டார்கள். அங்ஙனம் சதபதப்பிராமணத்தில் காண்க. தேவர்கள் இருவகுப்பினர்கள்; வானகத்தோர் ஒருவர். கல்விகேள்விகளிற் சிறந்த பிராமணர் பூமிதேவர்கள். அவ்விருவகுப்பினர்க்கும் இருவகை யாகங்கள் ஏற்பட்டன. முதல்வருக்கு ஹோமம்செய்வதேயாகம்; மற்றவராய கல்வி கேள்விகளிற் சிறந்தபிராமணர்களுக்கு த்தட்சிணையே யாகமெனப்படும். இவ்விருவகைத் தேவர்கள் திருப்தியடைந்தால் அவர்அமிர்தத்தில் வைப்பார்கள். அப்படிச் சிலகாலஞ்செல்ல, பிறகு பிராமணச்சாதியிலும்க்ஷத்திரியஜாதி உத்தமமென ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆகலால் க்ஷத்திரியரிலும் உயர்ந்தவரில்லை. ஆதல்கொண்டே, ராஜசூயத்தில் பிராமணன் க்ஷத்திரியரை உபாசிக்கின்றான். அதுகொண்டே க்ஷத்திரியருக்கு க்கீர்த்தி வளர்கின்றது. என்றும் ராஜசூயத்தில் அபிஷேகம் பெற்ற அரசன் ஆஸனத்தில் வீற்றிருந்து தமதுஉபாத்தியாயரை [அதாவதுயாகம் செய்விக்கும்பிராமணரை] ஓபிராமணரே! என்றழைக்க, அப்பிராமணர், ஓ அரசனே!

[illegible]

நீ அல்லவோ பிரமன் (அதாவது பிராமணன்) என்று சொல்வோன், அதுகொண்டே சொல்வது க்ஷத்திரியன் கீர்த்திபெற்றானென்று. இவ்விதம் வெகுகாலம் பிராமணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும் தத்தம் உயர்வைக்குறித்து அடிக்கடி கலகங்கள் பல நேரிட்டுவருகையில், அக்காலங்களில் பிராமணர்களே ஜயம் அடைந்தனர். க்ஷத்திரியவம்சம்முழுவதும் கொல்லப்பட்டது. அவர்களுள் மிஞ்சினவர்கள் தவப்பலத்தால் ப்ரம்மதேஜஸைப்பெற்று உத்தமாதிகாரங்களைபடைந்து அக்காலமிருந்தனரன்றோ? அவர்கள் பிராமணர்வம்சத்தில்சேர்க்கப்பட்டார்களென்று புராணங்களால் நன்குவிளங்கும். இறுதியில் பிராமணஜாதிக்கு இப்பெருந்தன்மை நிலைபெறச் செய்தவர், பரமசிவன் திருவருட்பிரசாதம் பெற்றும் அவரது மாணுக்கருமான பார்க்கவராமன். இவர் இருபத்தொருமுறை இப்பூமண்டலத்தில் வசித்த க்ஷத்திரியர்களைக்கொன்றுசமந்தபஞ்சகம்எனவழங்கும் உதிர மடுவை யேற்படுத்தி, அதில் தமது பெரியோர்களாகிய பிருகு முதலியோர்களுக்குத்தர்ப்பணம் செய்து, தமது யாகபூமியை காசிபர் என்னும் ஓர் அந்தணர்மணிக்கு அருந்தக்ஷணையாய்க்கொடுத்து, தமது ஆயுதப்பயிற்சியைத் துறந்து மகேந்திர பருவதம் சென்று தவம்செய்து வந்திருப்பதாய்த்தெரிய வருகிறது. ஸ்ரீமந் நாராயணவதாரமாகிய அப்பரசுராமன் தமது தவப்பலத்தால் சமுத்திரத்தைச் சிறிது ஒதுக்கிஅவ்விடத்தில் பலரைக்குடியேறச்செய்தார். அத்தேசமே இப்பொழுது கேரள தேசமென வழங்கப்படுகிறது. இத்தேசத்திற்குப் பிரம்மக்ஷேத்திரம் என்றும்பெயருண்டு. "[illegible]" பாரும், "இது பரசுராமனது திருத்தோள் வலிமை விளங்கும் பெருங்கண்ணாடியாகிய பிரம்மக்ஷேத்திர மென்கிறதேசம் தெரிகிறது." என்று சுகசந்தேசம் என்கிற கிரந்தத்தில் காணப்படுகிறது. அதனால் பிராமண ஜாதியார், க்ஷத்திரியஜாதியார்தொழிலைக்கொள்ளுமிடம் என்பது கருத்து. அது கொண்டே இத்தேசத்துப் பிராமணர்களுள் சிலர் ஆயுதப்பயிற்சியாகிய க்ஷத்திரியத் தொழிலை நடத்திவருகிறார்கள். ஸ்ரீபரசுராமன் க்ஷத்திரிய ஜாதியின் வேரறுத்த சங்கதி ஒருவாறு நாமெடுத்துரைத்ததேயல்லவா? அது அக்காலத்து க்ஷத்திரியர் செய்தகொடுமைகளால் என்று இதிஹாஸ புராணங்களில் நன்குவிளக்கப்பட்டிருக்கிறது. கிருதவீரியன் என்கிற ஓர்அரசன் கொடுத்த மிகுந்த திரவியத்தால் பிருகு குலத்தார் தனங்களையும், தானியங்களையும், மிகுதியாய் பெற்றிருந்தனர். பின்னர் அம்மன்னவன் இவ்வுலகத்தைத்துறக்க, பிறகுஅக்குலத்தார்வறுமையடைந்து, பிருகு குலத்தாரைப் பணத்திற்கென யாசித்தார்கள். அப்பொழுது பிருகு குலத்திற்பிறந்த சிலர், தமது திரவியங்களைப் பூமியில் புதைத்துக் காப்பாற்றிவந்தனர். மற்றும்சிலர் அவ்வரசர்களிடம்பயந்து தமது பணங்களை ப்பிராமணர்களுக்களித்தார்கள். சிலர்அரசரிடமே கொடுத்தார்கள். சிலர் சிற்சிலபாகங்களைக்கொடுத்து மற்றவைகளை வைத்துக்கொண்டனர். இவ்விதங் காலஞ்செல்ல ஒருக்கால் ஓர் ராஜவம்சஸ்தன் இவர்கள் பூமியில் புதைத்ததனத்தை ஒருவர்வீட்டில்வெட்டிக்கண்டெடுத்தான். பிறகு அவ்விடம் அரசர்கள்எல்லோருங்கூடி வீட்டிலுள்ள பணங்களைக் கொள்ளைகொண்டும், அவ்விடமிருந்த குழந்தைகள்முதலிய யாவரையுங்கொன்றுங் களித்

[illegible]

தார்கள். அக்காலத்தில் ஒருஸ்திரீ தனது கர்ப்பத்தை ஏதோஒரு உபாயத்தால் காப்பாற்றினாள். அவ்வரசர்கள் அக்குழந்தையையும் கொல்லப்பலவாறு முயன்றும் அது பயன்படவில்லை. ஏனெனில், அக்குழந்தை பிறந்தவுடன் தனதுபேரொளியால் அக்கொடுங்கோன மன்னவர் கண்களை ஒளிமழுங்கச் செய்தது, பிறகு அவ்வரசர் தமது கண்களை யிழந்து அவரது தாயடிகளைப்பணிந்து, மறுபடியும் தமதுகண்கள் விளங்கும்படிவேண்ட, அம்மங்கையர்மொழிந்ததாவது; அரசர்களே! இக்குழந்தை ஒருவன்; [தொடையினின்று பிறந்தவன்] அவனிடம் வேதங்களெல்லாம் குடிகொண்டிருக்கின்றன. அவர் செய்த இந்தச் சாபத்தை நீக்க என்னால் எவ்விதம் கூடும்? என்பது. பிறகு லோகாந்தரத்திலிருக்கும் ப்ருகு குலத்தார் ஆஞ்ஞையால், அவர்களுக்கு உண்டான சஞ்சலத்தை அகற்றி, அவர்களிடமுண்டான கோபத்தையுமடக்கிக்கொண்டார். அக்கோபம் பரசுராமனால் பயன்பட்டது. இப்பரசுராமன் பிதாமகர் ரிசீகர் எனகிற பெயர்கொண்ட ஓர்பிருகு குலத்தார். அவரது பனியாளும் குசிக வம்சமெனகிறஒரு க்ஷத்திரிய குலத்திற் பிறந்து, குப்ஜமென்கிற ராச்சியத்தையாண்டுவந்த காதி ராஜனென்னும் ஓர் அரசன் பெண். அவளது பெயர் சத்தியவதி. ஆதலால் பரசுராமன் தனது தகப்பனைப்போல், தகப்பன வழியில் பிராமணரும்; தாய் வழியில் க்ஷத்திரியருமானவர். பரசுராமன் தாயும் ரேணு என்கிற அரசனுடைய குமாரி. ரேணுகை என்னும் பெயரை வகித்தவள். க்ஷத்திரிய ஜாதியை முற்றிலும் வேரறுத்துப்பிராமணர்களுக்கு உயர்வுண்டாக்கியஇப்பரசுராமனைப் பெற்றவள் பிறந்த குலமாதலால் குசிகக்ஷத்திரிய குலம் உலகத்தில் பெரும்புகழ் பெற்றது. அக்குலத்திற்றானே விசுவாமித்திரர் பிறந்தார். அவர் யாம்முற்கூறிய சத்தியவதி யென்பவளினிளையசகோதரர் காதிராஜன்குமாரர்; ரிசீகமகரிஷியின்மைத்துனர்; சாதியில் அரசன்; தவத்தால் ப்ரம்மரிஷி. இவ்வரலாறு அநேக புராணங்களில் பிரசித்தமல்லவோ? ஆனாலும் முனிவர் தவஞ்செய்த திறமையை மற்றவரனுசரிப்பது மிகக்கடினமென வாதராயணமுனிவர் மகாபாரதமுதலிய வற்றில் விளங்கக் கூறினர். இக்கதை வேதத்தில் கண்டதில்லையாயினும் "பரதவம்சத்தில் புரோகிதனான விசுவாமித்திரனும், திருச்சுக்களின் புரோகிதரான வஸிஷ்டரும். பீஜவனராசகுமாரனாகிய சுதாசனென்கிற அரசனுக்குப்புரோகிதம் செய்விக்கும் விஷயத்தில் கலகப்பட்டார்கள்,, என்றே உளது. இக்கதையை மகாபாரதம் முதலியவற்றில் விரிவாய்க்காணலாம். சுதாசன் என்பவன் இக்ஷ்வாகுவம்சத்தில் பிறந்தஓர் அரசன். அவனுக்குப்புரோகிதனா யிருக்க விசுவாமித்திரர் விரும்ப, அவ்வரசன் வஸிஷ்டரையேவைத்துக்கொள்ளஇஷ்டப்பட்டான். இதனால் கலகமேற்பட்டது. ஓர்தினம்வேட்டைக்கெனவெளிவந்தசுதாசனென்னும் அரசன்வசிஷ்டமகரிஷியின் குமாரர்களில் முதல்வனாகியசக்தி மகரிஷியைக்கண்டு தமதுவழியைஅவர் குறுக்கிட்டாரென்று கோபங்கொண்டுஓதுங்கும்படி ஏவினார். சக்தி மகரிஷியும் சிறிது வணங்கி "ஓஅரசனே! நீமேழி ஏற்பட்ட நூலின் வழி, இது எமது மார்க்கம், எங்குப் அரசர்கள் அந்தணர்களுக்கு வழி ஈந்திடுவாரென்பது தர்மநூலின் உண்மை,, என்றுவிடை பகர்ந்தனர். பிறருண்டான ப்ரம்ம கைவர்த்தமென்னும்

[illegible]

புராணததில் உள்ள ஓர் வசனத்தை அச்சகதி மகரிஷி அறிந்திருப்பரேல் அதையே வேளியிட்டிருப்பார். அஃது எங்ஙனமெனில், "நமது ஆசிரியனேயும், அந்தணரையும், அர்ச்சாவதாரங்களேயும் கண்டவுடன் பணியாப்பாவி பன்றியாய்ப்பிறப்பானென்றது. ,, இவ்விதமுரைத்திருப்பரேல் எத்தண்டனே கிடைத்திருக்குமோ அறிகிலேம். முன் யாம் கூறிய வாறு உரைத்துநின்ற சகதி மகரிஷியை அச்சுதாசன் கையில்கொண்ட கதையால் ஓரடியடித்தான். உடனே அச்சகதி மகரிஷிகோபங்கொண்டுஅவ்வரசனே நோக்கி,நீஅசுரனுவாயெனச் சபித்தார். அவ்விடம் தமக்கிடங்கண்ட விசுவாமித்திரர் அவ்வரசனுக் கபயந்தந்து, அச்சாபத்தின்பலத்தைஅவ்வரசன்அச்சகதி மகரிஷியிடமேகாட்டச்செய்வித்தனர்.உடனே வசிஷ்ட மகரிஷியின் குமாரர்களெல்லோரும் சாபத்தால் மாம்சபட்சகரான அவ்வரசருக்குமாம்சாகாரங்களாயினர். அது முதல் புத்திர சோகத்தால் வசிஷ்ட மகரிஷிதமது சாபத்தால் கௌசிக வம்சத்தைஅழிக்க வலிமைபெற்றவரேனும் தாமே தம்மை நாசம்செய்துகொள்ளமுயன்றுர். பிறகுபலவாறுமுயன்றும்பயன்படாததுகண்டு மிகவருந்தி, தமதாசிரமத்தையடைந்து தமது சகதி என்னும் குமாரனின் மனேயாள் கர்ப்பணிஎன்பதை யறிந்து, தமது குலத்தின்அம்சமிருப்பதைக்கண்டுகளித்தார். பிறகு அம்மங்கை பராசர முனிவரைப்பெற்று எடுத்தாள்- அக்குழந்தையையும் விழுங்கவரும் அச்சுதாசனென்னும் அரசனேக்கண்ட வசிஷ்டர் அவனது சாபத்தை யொழித்து அவரது புரோகிதத்தையும் முன்போலொப்பினுர். அது முதலில் அச்சுதாசன் பிராமணர்களிடம் வெகுபக்தியுள்ளவனேனும், பிருமணர்களுக்கு விரோதஞ்செய்தால் க்ஷத்திரியர்களுக்கு வருங்கெடுதியில் ஓர் திருஷ்டாந்த மாயினுன். ஜன்மத்தில் அரசனுயுள்ள விசுவாமித்திரன் பிருமணனுனதற்குக் காரணங்களாய பல கதைகள் பலபுராணங்களில்பலவிதமாய் எழுதப்பட்டிருக்கின்றன. முதலில், சாமதேனு என்கிற பெயருள்ள- வசிஷ்டமுனியின் பசுவைத் தமதாக்க விருப்பங்கொண்டார்- பிறகு, தான் முயன்று பயனற்றுப் போனபடியால், அநேக ஆயிரவருஷங்கள் தவஞ்செய்து, பிறகுபிராமணரானதாய்ச்சிலவிடம் காணப்படுகிறது. நமது தேசத்திற்குத் தர்மநூல்களியற்றியவருள்முதல்வரான மனுவும் சூரியகுமாரனுன க்ஷத்திரியனே. "ஊ௦விஉவ௶உதெயாஹ௦,, என்கிற கீதாவசனத்திற்குரையெழுதும்பொழுதுமதுஸூதனுநந்தஸரஸ்வதிஸ்வாமிகள் முதலிய சிலர், சூரியனே ஆதிக்ஷத்திரியன் என்று எழுதியிருப்பதை யாங்கே சண்டுணர்க. அவர் தன்ஸ்வதர்மத்தைமீறி பிறர்க்குத் தர்மநூலே ஓதிவைத்ததை ஸமாதானஞ்செய்யப் பற்பல யுக்திகள்விசித்திரமாய் மீமாஞ்சையில்வெளியிடப்பட்டன. அவ்விதமே கௌஷீதகிப்பிராமணேபநிஷத்தில் "காசிக்குஅரசனுன அஜாதசத்ரு என்பவர்பலாகர் குமாரரான கார்க்கியர் என்பவரைக்காட்டிலும் மேலான பிர்ம நிஷ்டையைப்பெற்றவராகையால், அக்காசிராஜனே அக்கார்க்கியமுனி குருவாக வேண்டிக்கொண்டார் ,என்று நன்குகக்காணப்படுகிறது. சதபதப் பிராமணத்திலும் திருப்த பலாகி என்கிற கார்க்கியனேக்குறித்த இதேபதை சொல்லப்பட்டது. அவ்விதம்சாந்தோக்கியத்திலும் 'பிரவாஹணஜைவாலி என்கிற பாஞ்சாலராஜன் அருணேயரான சுவேதகேது

[illegible]

வையும், அபர்ககப்பனையும் ஜபித்து இதுவரையில் ஓர் அந்தணரும் அறியாததும், அரசர் அறிந்தும் அரியதுமான சில தத்துவங்களை அவர்களுக்கு உபதேசித்தார்,, என்று வெளியாகிறது. விதேகமகாராஜன் [ஜனகன்] மகாபிரமநிஷ்டனானது யாஞ்ஞவல்கிய மகாரிஷியே ஒப்புக்கொண்டார். அச்சனகராஜன் பிராமணனல்லாதாய்ச் சதபதப்பிராமணஞ் சொல்கின்றது. க்ஷத்திரியரிலும் சிலர் ஞானமிகுதியால் பிறர்க்கு உபதேசிக்குந் திறமையும் பெற்றனர் என்று வெளியாகின்றது. காலக்கிரமத்தில அரசர்கள தமது படைத்தொழிலைக் கைக்கொண்டு ஞானத்தைதகைவிட, பிராமணர்கள் எல்லாவித அதிகாரங்களையும் தமது சொந்தமாக்கிக்கொண்டார்கள். ஓர்காலத்தில் சர்வ ஜாதிகளிலும் பிராமணர் மேலானவரென்பதாய் ஏற்பட்டுப்போனபடியால், அதைக் குறைக்காமலிருக்கவேண்டிப் பல புது ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ்வித ஏற்பாடுகள் ஆரியர், சூத்திரர் என்னும் இவ் விருவகுப்புக்களிலும் உண்டு. சூத்திரர்களிலும் ஒரு வகுப்பினர் மறு வகுப்பினரிடம் விவாகஞ் செய்யார். ஆரியர்களும் ஒருவர்க்கொருவர் விவாகசம்பந்தம் விலக்கிக்கொண்டார்கள். இவ்விதம் வேதங்களிற்காணப்படாத பல நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டகாலத்தில் ஜனங்களுக்கு இவ்விதக் கட்டுப்பாடு சகிக்காமல், இதை எந்தவிததிலாவது ஒழிக்க எண்ணங்கொண்டதாய் யாம் ஊகிப்பது இரண்டாயிரம வருஷங்களுக்கு முன்னமே நமது தேசத்தில் வெளிவந்த பௌத்த மதத்தாலேயாம். இந்தப் பௌத்தமதத்தின் ஆசிரியனான சுத்தோதனராஜனுடைய குமாரனும் விசுவாமித்திரன், ஜனகன் முதலானவர்களைப்போல க்ஷத்திரியவமிசத்திற் பிறந்து, பிராமணர் தொழிலைக் கைக்கொண்டவர் என்பதாக ஸ்ரீ குமாரில பட்டாசாரியார் "க்ஷத்திரியனாயிருப்பவன் தன் தருமத்தை விட்டுப் போதனப்பிரதிக்கிரகங்களை எடுத்துக்கொண்டான்,, என்றும், மற்றோரிடத்தில் "புத்தர்முதலானவர்க்கும் இவ்விதம்செய்வது தமக்குக் குலாலங்காரமாகக் கொள்ளப்பட்டது. அதுபற்றியே "உலகத்தாருக்கு இக்கலியால் நேரிடும் பாவம் என்னிடம் சேரவும், உலகம் அப்பாவத்தைவிட்டுநீங்கவும் விரும்புகிறேன்,, என்று உரைத்தான். அவர் உலகத்தார்பொருட்டு க்ஷத்திரியதருமத்தைவிட்டுப் பிராமணதருமமான போதனத்தைக் கைக்கொண்டு, ஒன்றையும் தள்ளச் சக்தியற்றவர்களான பிராமணர்களால் ஏற்படுத்தப்பட்ட வழிகளைத் தடுத்து, பலர்க்குத் தத்துவபோதனம் செய்து தருமபீடையையும் அடைந்து, மற்றவர்க்கும் அனுக்கிரகம்செய்தார்,, என்றும் கூறப்பட்டுள்ள சரித்திரங்களாற் பெரும்புகழ்பெற்றான் என்று சொல்லியிருக்கின்றார்.

இன்னும் வரும்.

ஓர் வைகாநசருக்கு விடை.

ஐயா!

விஷ்ணுவுக்குவிபூதிதாரணம் வேதத்திலுண்டா? இல்லையா? என்பதை முன் சஞ்சிகையில் பரிஷ்கரித்தோம். அதை யநுசரித்து இன்னுங்கொஞ்சம் எழுதுவோம். ஓர் வைகாநஸர் உபந்யசித்ததை அடியாகக்கொண்டே முன்னர் யாமெழுதினோமாகையால், இப்போதும் அதை அநுசரித்தேயெழுதுகிறோம். முன் விவகரித்த சுருதிவசனம் பஸ்மஜாபாலம் என்னும் உபநிஷத்திலுள்ளது. பஸ்மோபநிஷத்தில் விஷ்ணு சிவனை வழிபட்டாரென்று கூறுமிடத்தில், அவர் பஸ்மமில்லாமல் சிவனை

[illegible]

வணங்கினரென்று கூறுதல் யாண்டியையும்? பஸ்மம் அவரை வியாபித்துவிட்டமையால், பூர்வபக்ஷிபாரது பிரயத்தனம் நிஷ்பலமாயிற்று. வேதத்தாலும், உபப்பிரஹ்மணங்களாலும் விஷ்ணுவுக்குப் பஸ்மதாரணம் சித்தித்தமையால், அந்த விஷ்ணுவினுடைய அவதாரங்களாகிய இராம கிருஷ்ணாதிகளுக்கு விபூதி தாரணமுண்டென்ற விஷயத்தில் நமது வைகாநஸசிரோமணியார் செய்துவரும் வீணாக்ஷேபங்கள் எவ்வளவும் பெருமையடையமாட்டா.

இனி, மந்தாதிகாரிகளுடைய பிரமை நிவிர்த்தியார்த்தம் அவைகளையும் வருவித்தொழிப்பாம். "ஸ்ரீராமர் இராவணனைச் சம்மரிக்குஞ்சமயத்தில், உருத்திராம்சமாயுள்ள ரூபத்தைத் தரித்தார். அதனால் எப்பொழுதும் அவர் தரிப்பது திருநீறெனல் எவ்விதம் ஒவ்வும்? அவ்விதஞ் சொன்னால், கோபங்கொண்ட இரகுநாதன் என்று கூறுகையால், கோபமும் எக்காலத்துமவர்க்குளதாகுமல்லவா,, என்று ஓர் சமாதானந் தேடிக்கொண்டனர். ஸ்ரீராமர் உருத்திராம்சமாயுள்ள ரூபத்தைத்தரித்தார் என்று கூறும் நுட்பத்தை யினிது பரியாலோசிப்பாம். உருத்திராம்சமென்பது இராவணனைக்கொல்லத்தக்க சிவசம்பந்தமான ஓர்வித தன்மையென்று ஏற்படுகின்றது. அந்த அமிசமில்லாவழி இராவணனைக்கொல்ல இராமனால் முடியாதென்றும் வெளியாகின்றது. அந்தத்தன்மை சிவனிடத்தியற்கையும் இராமனிடத்திற் செயற்கையுமாக முடிந்தது. அஃது தனக்குச் செயற்கையாலுண்டாகாதபோது தான் இராவணனுக்கு அடங்குதலேயன்றி அவனைக்கடக்கமுடியாது. அந்தத் தன்மையானது உயர்ந்ததா? தாழ்ந்ததா? என்று சற்று யோசிப்பாம். தாழ்ந்ததாயின், அதை இராமன் அபேட்சித்ததும் அடைந்ததும் தவறு. உயர்ந்ததாயின், அது இராமன் பக்கல் இயற்கையாகவிராமல் சிவன்பக்கலிருப்பதென்னை? உயர்ந்ததன்மையை இயற்கையாகவுடையவன் உயர்ந்தவனாகத் தடையில்லையாகையால், உயர்ந்தவனாகிய சிவனிடத்தில் இராவணனை ஸம்மரிக்கத்தக்க அனுக்கிரகத்தை இராமனடைந்தானென்பதே முடிவு. இராவணனும் அநேகரைக் கொன்றிருக்கிறானாகையால், அப்போது அவனும் பிறரை ஸம்மரிக்கத்தக்க சிவானுக்கிரகத்தையடைந்தானென்பதே முடிவு. முடிவாகயோசிக்கின், இராவணனும் உருத்ராம்சத்தைத்தாங்கினான், இராமனும் உருத்திராம்சத்தைத் தாங்கினானென்று அறியவேண்டியது. இதனால், அமிசம் என்பது அனுக்கிரகம் என்று தீர்மானமாயிற்று. இராவண சம்மாரத்திற்கு இராமனடைந்த பிரயோசனம் இனைத்தென்று வெளிப்பட்டமையால், இதில் சம்பந்தத்தை யடையாத இராமனது விபூதி தாரணத்தை நம்மவர் ஏதோ மெழுகி வைத்ததைக் கொஞ்சம் யோசிப்பாம். இராவண சம்மாரத்திற்கு விபூதிதாரணமேதுக்கு? விபூதி தரித்தாற்றான் உருத்ராம்சமுண்டாகி அவனைக்கொல்லுந் தன்மை யுண்டாகுமோ? விபூதி தரிக்காதவரேனும் யுத்தத்தில் ருத்ராம்சத்தால் வெற்றிபுனைந்த கதைகள் புராணங்களிலும், அநுபவத்திலுங் காணப்படுமாறென்னை? இதனால், விபூதிதாரணம் இராமனுக்கு இராவணனைக் கொல்லத்தக்க உருத்ராம்சமாகாது. விபூதி இராமனுக்கு நைஜமான சைவதர்மம். இதை மறைக்க நம்மவர் கஷ்டப்படுவது சிஷ்டரொப்பத் தகாதாயிற்று. இராவண சம்மாரத்துக்கு விபூதி தாரணம் இராமனுக்குக் காரணமாகாமை வெளிப்பட்டமையால், அக்காலத்தில் இராமன் கொண்

[illegible]

ட கோபத்தோடு விபூதியுஞ் சேர்ந்து, அக்கோபம் நீங்கிய போது அத்தோடு அதுவும் இராமனைவிட்டு நீங்க அவசியமில்லாமற் போயிற்று. நம்மவர் இராமனுக்கு விபூதியைப் பரிகரிக்க வந்து, இராமன் சிவானுக்கிரகமில்வழி இராவணசம்மாரஞ்செய்ய முடியாதவரென்பதையும் வெளிப்படுத்திக்கொண்டனர். இன்னும்விரிக்கிற் பெருகும். இங்ஙன நிற்க.

அத்யாத்மராமாயணம் சிவாத்வைதியொருவரால் செய்யப்பட்டதெனவும், அதில் ஆக்கியோர் தமது ஆசாரத்திற்கேற்ப இராமனுக்கு விபூதிகூறினாரெனவும், அதை அநுசரித்துப் பவபூதியென்னுங் கவியும் இராமனுக்கு விபூதிதாரணங் கூறினாரெனவும், பவன்--சிவன்; பூதி--விபூதி; சிவவிபூதியென்னும் பொருளைக்கொண்ட சைவநாமத்தையுடைய கவியால் இராமனுக்கு விபூதிதாரணங் கூறப்படுவது சஹஜமெனவும், இதனால் இராமனுக்கு விபூதிதாரணம் சாதிப்பது உசிதமாகாதெனவும் நமது வைகானஸபண்டிதர் ஓர் சித்தாந்தஞ் செய்தார். வான்மீகிபகவான் எங்கும் இராமனுக்கு விபூதிசொல்லவில்லையென்றுஞ் சந்தோஷித்தார். இதனையுஞ் சற்று யோசிப்பாம். அத்யாத்மராமாயணஞ்செய்தவர் அவரது ஆசாரப்படி இராமனுக்கு விபூதிகூறினார் என்று ஆக்கியோனை நம்மவர் நிந்தை கூறினார். இராமனுக்கு இல்லாத விபூதியை உளதாகக் கற்பித்தாமெனின், அவர்செய்த நூலிலன்றி அவருக்குமுந்திய எந்தநூலிலும் இராமனுக்கு விபூதிதாரணங் கேட்கப்படாமலிருத்தல்வேண்டும். பாத்மம், கூர்மம், லைங்கியம் இத்தியாதிகளில் விபூதிதாரணங் கேட்கப்பட்டவாறென்னை? இஃதறியாது கவியைத்தூஷித்தது நம்மவர்க்கு அபராதமேயாகும். சிவாத்வைதியால் அத்யாத்மராமாயணஞ் செய்யப்பட்டமையால், அவர் விபூதியைக்கூறினாரென்று சொல்லவந்த வைகானஸர் பஸ்மதாரியாய் விளங்கும் சிவாத்வைதியாகிய ஸ்ரீ சங்காசாரியர் (விஷ்ணு பாதாதிவர்ணனஸ்தோத்திரத்தில்) விபூதியைக்கூறவில்லையென்று சாக்ஷிகூறவந்ததென்னை? ஒரு அத்வைதிக்குக்காட்டிய நியாயம் மற்றோர் அத்வைதிக்குக் காட்டிய நியாயத்தில் விபசரித்தது. இதனால், பூர்வபக்ஷியார்வாதம் நிலைதளர்ந்தழிந்தது. ஸ்ரீ சங்கராசாரியார் விஷ்ணுவுக்கு இன்ன புண்டரம் நிரூபித்தாரென்று நம்மவர் பிரகாசப்படுத்தாமையால், அதைப்பற்றி ஈண்டு யாமொன்றும் பிரஸ்தாபிக்கவில்லை. அந்தநூலைப்பற்றியும் யாம் அதிகமாகக் கவனிக்கவில்லை. இனி, பவபூதியாரது பிரஸ்தாபத்தை யோசிப்பாம். கம்பனுடைய மகன்பெயர் அம்பிகாபதி. இது பிள்ளைக்குப் பிதா இட்ட பெயர். இதனால் கம்பன் சிவபக்தனாகிறான். சிவபக்தனாகிய கம்பன் இராமாயணமுழுதும் சிவபரமாக்கிவிடவேண்டும். அப்படிக்கின்றி எது எது எப்படியிருக்கவேண்டுமோ, அது அது அப்படியேயிருக்கச்செய்தனன். பவபூதி என்பது அவனுக்கு அவன் பிதா இட்ட பெயர். இதனால், பவபூதியினுடைய பிதாவுக்கே சைவதர்மம் நிலைக்கின்றது. கம்பன், பவபூதி இவர்கள் யோக்கியதைகளை விசாரிக்கிறபோது சைவப்பெயர்களைத் தாங்கியிருப்பதுகொண்டே கவிகள் சைவபரத்துவத்தை நாட்டுவார்களென்று நம்மவர் கொண்ட துணிவு இழுக்கடைந்துவிட்டது. நம்மவர் அவ்வாறு அபிப்பிராயப்பட்டதற்குக் காரணம், சிலர் தங்களபிமானத்தின்வழி உண்மைநூல்களைக் கெடுப்பது அநுபவத்தில் யாவருங் காணலாமாகையால், அதுவே எங்குமிருக்குமென்று யோசித்ததாயிருக்கலாம். பவபூதியைத் தோஷங்கூறிய நம்மவர் [கிராமதீபிகை] என்னு நூல்

[illegible]

செய்தவரை நடுவுநிலைமையுடையவரென்று புகழ்ந்தார், அவர் கண்ணனாரதனையைக் கூறிய நூலில் கணநாதரையுங் கூறினாராகையால் என்று. அவர் கண்ணனைப்போல் கணநாயகரையும் பரம்பொருளென்றுகொண்டு கூறினாரா? கண்ணனுக்குக் கணநாதர் தாழ்ந்தபொருளென்றுகொண்டு கூறினாரா? தாழ்ந்தபொருளென்றே மதித்து ஆராதிக்கிறவர்களதிகாரானுகுணமாக அப்படிக்கூறினமையால், வைகாநஸபுங்கவர் தேடிய சமாதானம் வாளாமுடிந்தது. கண்ணனாரதனையைப் பிரஸ்தாபிப்பதற்கு முன்பு இராமனாரதனையை அகஸ்தியசம்மிதையால் வெளிப்படுத்தினர். அகஸ்தியசம்மிதை ஸ்காந்தத்திலொன்றாகி [ஹாலாஸ்யமஹாத்மியம்] என்று எம்மில் பிரசித்தமாக வழங்கப்பட்டு வருகிறது. நம்மவர்கூறிய அகஸ்தியசம்மிதையாதோ? அறியேம்! அது பாஞ்சராத்திர வைகாநசங்களிலேதாவது பிரகரணங்களாகவிருக்கலாம். அவை அவைதிகமென்பது ஸ்மிருதிகள் துணிபாகையால், யாம் கவனிக்கத்தகாதனவாயின. அன்றியும், நம்மவர் "ஸ்ரீவைகாநஸம், பாஞ்சராத்திரம் முதலிய ஆகமங்களில் ஸ்ரீராமர் கிருஷ்ணர்முதலியவர்கள் பிரகரணத்தில் அவர்கள் திருநீறணிந்தசக்தி எடுத்துக்காட்டவேண்டியதல்லவா," என்றுகடாவியதை யாம் கவனிக்கவேண்டியதில்லையென்பதும் வியக்தமாயிற்று. வான்மீகிபகவான் இராமனுக்கு விபூதி ஏன் கூறவில்லை? என்று ஆக்ஷேபிக்கில், திருமண்ணைக்கூறியிருக்கின்றாரென்று வெளிவந்தாலொழிய அந்த ஆட்சேபம் கௌரவத்தையடையாது. "ஸ்ரீராமன் சீதையுடன் கோதாவிரியில் ஸ்நானஞ்செய்து லட்சுமணருடன்கூடி விளங்கியது, பகவானும் ஈசருமான உருத்திரர் பார்வதியாருடனே ஸ்நானஞ்செய்து நந்தியுடன்கூடி விளங்கியதுபோலிருந்தது என்று வால்மீகிபகவான் கூறியிருக்கிற வுபமானத்தை நம்மவர் யோசிக்கவேண்டியது. ஸ்நானம்பண்ணினவநந்தரம் விபூதிதாரணம் சிவனார்க்குச் சொல்லாமேயமைதலால், அவரில் வேறுகாத நிலையினையுடைய இராமருக்கும் அதுவே சிறக்கயாததடை? சிவன் சூன்யமுகமாயிருந்தாலொழிய ஸ்ரீராமனுக்கு விபூதிதாரண நிக்கிரகம் சிறக்கமாட்டாது. இதனையறிந்தோர் வான்மீகிபகவான் இராமனுக்கு விபூதியையொட்டவில்லையென்று சொல்லத்துணிந்திடார். அன்றியும், உயர்ந்தபொருளோடு தாழ்ந்தபொருளை ஸாம்யங்கூறுவதேயன்றித் தாழ்ந்தபொருளோடு உயர்ந்தபொருளை ஸாம்யங்கூறுதல் மரபன்று. சிவனோடு இராமனையும், பார்வதியாரோடு சீதையையும், நந்தியோடு லட்சுமணனையும் ஸாம்யங்கூறியதுகொண்டே வான்மீகியினது இருதயம் வியக்தமாய்விட்டது. இத்தகைய சிவஞானச்செல்வர் இராமனுக்கு விபூதிகூறவில்லையென்று நமது பூர்வபக்ஷியார் சந்தோஷித்தது உசிதமாகமாட்டாது. இவைபோன்ற பலகாரணங்களால் அவர் எப்போதும் விபூதிதாரணஞ்செய்துகொண்டிருக்கும் பரமபாசுபதரென்று கூற யாதொரு தடையுமில்லையென்றறிக. கிருஷ்ணனுடைய குமாரனுக்கு ஸாம்பன் எனப்பெயரிட்டு மகிழ்ந்தமையும் அவருண்மையை நிலைப்பிக்கும். ஸ்ரீராமர் அகஸ்தியரிடம் விரஜாதீக்ஷை செய்துகொண்டது முதலிய பலவுண்மைகள் பிரசித்தியாகையால், அவர் விபூதியில் அன்பில்லாதவரென்று நமது வைகாநஸநண்பர் பிரஸ்தாபிப்பதங் குணஞ்செய்யமாட்டாது. ஸ்ரீராமகிருஷ்ணர்கள் திருமண் தரித்திருந்தார்களென்று வேதத்திலில்லாவிட்டாலும் புராணங்களிலாவது யாவருமொப்பக்காட்டி நமது நண்பர் சந்தோஷிக்கட்

[illegible] (ஆழ்வார்கள்) [illegible] (ஏறிய பித்தினொடு கரியமேனியில்) [illegible]

[illegible]

[illegible]

[illegible]

டும். இவர்களுடைய ஆழ்வார்கள் கூறிய நாலாயிரத்திலேவந்து தேடிக்கொண்டுவரட்டும். ஆழ்வார்கள் பிரபந்தத்தில் "ஏறிய பித்தினொடு,, என்னும் பாடலிலும், "கரியமேனியில்,, என்னும் பாடலிலும் விஷ்ணுவுக்குத் திருநீறு என்னும் விபூதியையே கூறியிருத்தலை நம்தோழர் இனியேனும் பார்த்துச் சந்தோஷிக்கட்டும். இவ்வுண்மைகளைப் பாராமல், நம்மவர் ஓரிடத்தில் இராமகிருஷ்ணாதிகளை வழிபடும் அதிகாரிகளுக்குத் திருமண்காப்பு முதலியவைகளை மந்திரகல்பங்களிற் கூறியிருப்பதென்னை? என்று கடாவினர். அங்ஙனங் கூறியிருப்பவை வேதசம்மதம்பெறாத பாஞ்சராத்திரிகளை அநுசரித்தவை. ஆழ்வார்கள் கூறியவை வேதத்தை அநுசரித்தவை. விஷ்ணுவினது உபாசனையும், விபூதிதாரணமும் வேதப்பிரதிபாதிதமாகையால் விஷ்ணுவுக்கும், விஷ்ணுவினது அவதாரங்கட்கும், விஷ்ணுவினது அடியார்களுக்கும், ஏனைய பிரமா, இந்திரன், சூரியன் முதலியவர்களுக்கும், அவர்களை உபாசிக்கின்றவர்களுக்கும் பஸ்மமே தார்யமென்றறியத்தக்கது. ஆகையால், சுபகரமும், பரமபாவனமுமாகிய பஸ்மத்தையே சாதுக்கள் தரித்து ஸுகித்திடுவர். பத்திரிகையில் வெளியிட நேர்ந்தமையால் விரிவஞ்சியிவ்வளவில் நிறுத்தினேம்.

ஸித்தாந்தி.

பாதிரிமார் பாடசாலையில் பெண்களை அனுப்புவதால் நேரிடும் அனர்த்தம்.

இந்துமதாபிமானிகளே!

சீமையிலிருந்து வந்த பாதிரிமார் வெகு கிருபையுடையவர்போல் காட்டி, இத்தேசத்திலுள்ள அநேக இந்துக்களைக் கிறிஸ்தவராக்கி வருவது அறிவோமல்லவா? மிகக அருந்தவஞ்செய்து பெற்றெடுத்த புத்திரர்களை, அவர் ஸ்கூலில் கல்விக்காக ஆசைப்பட்டு விடப்போய், பத்துமாதம் சுமந்து வருந்திப் பெற்று நாளொருமேனி பொழுதொரு வண்ணமாகச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த கண்மணி போன்ற பிள்ளைகளைப் பறிகொடுத்து, கண்ணீருங் கம்பலையுமாய்ப் புலம்பினவர் எத்தனைபேரிருக்கின்றார்கள்? வரவர இங்கிலீஷ் படிக்கும் நமது சிறுவர், பல அக்கிரமங்களைச் சற்றுக் கொடுக்கும் விவிலியநூலான பைபிலிலுள்ள அளவில்லாக் குற்றங்களைச் சின்னபின்னமாகத் தூற்றவே, சிறுவனைத் தனியேயிட்டுக்கொண்டுபோய்த் துர்ப்போதனைசெய்து, எழுதப்படாத இழிந்த செய்கைக்குட்படுத்திக் கிறிஸ்தவராக்குவதோடு, அநாதப்பிள்ளைகளுக்குச் சோறுபோட்டுங் கிறிஸ்தவராக்கிவருகின்றனர். இதுநிற்க; பெண்கல்விச்சாலைகள் ஊர்கள்தோறும் ஏற்படுத்திக் கெடுக்கும் விதத்தையும், மோசத்தையும் கூறுகின்றேம்:—

பாதிரிமார் சிலவிடங்களில் பெண்கல்விச்சாலைகளுக்கு இந்துக்கள் பெயரையே வைத்திருக்கின்றனர். இதற்குக் காரணம் இந்துக்கள் தமது பெண்களைக் கொண்டுவந்து விடுவார்களென்னுங் கருத்து. வீடுவீடாய் நுழைந்து தந்திரவார்த்தை சொல்லிப் பெண்களை யிட்டுக்கொண்டு போகின்றனர்; முதலில் பைபில் பாடம்வைக்காமல் பெண்கள் தொகை அதிகரித்தபிறகு வைக்கின்றனர்; இந்து உபாத்தியாயர்களை வைப்பதுபோற்காட்டிப் பின்பு கிறிஸ்தவஉபாத்தியாயர்களை வைக்கின்றனர்; விக்கிர

[illegible]

கள்ளைத் தொழுவதைப்பற்றிப் பரிகாசஞ்செய்து தூஷிக்கின்றனர்; பிள்ளையார்சதுர்த்தி முதலிய காலங்களில் பிள்ளையார் சாப்பிட்டதா? பேசினதா? மண்பிள்ளையாரைக் கும்பிட்டீர்களா? என்று இவ்வாருன தூஷணைகள் சொல்லிக்கொடுக்கின்றனர்; இந்துமதத்தை நம்பாமலும், பைபிலையே நம்பவும் செய்து, கிறிஸ்துமத தேவதையைத் தொழவும், ஜெபம்பண்ணவும் கற்பிக்கின்றனர்; பைபிலுக்கும், கிறிஸ்து சங்கீதப்பாட்டுக்கும் பாடுபடுவதுபோல மற்றப்பாடங்களுக்கு அவ்வளவு அக்கறைப்படுவதில்லை. வாலிப கிறிஸ்தவ உபாத்தியாயர் இந்துப் பெண்களைக் கையாற்றீண்டி அடித்து முத்தங்கொடுத்து; அடிவாடி போடி என்றும், அடீ சக்களத்தியென்றும் பேசுகின்றனர். "ஆடுநனைகிறதென்று ஓநாய் குலுங்கிக்குலுங்கி அழுகிற,, தெனனும் பழமொழிபோல், பறைச்சாதிக் கிறிஸ்தவச்சிகள் இந்துக்கள் வீட்டிற்குட்போய் இந்துஸ்திரீகளுக்குக் கல்வி, தையல் கற்பித்துத்தருவதுபோல மேலுக்குக் காட்டி, இந்துமதத்தை இகழ்ந்து, நினைப்பதற்கும்யோசிப்பதையில்லாது, பாகவத முதலிய புராணங்களிலிருந்து திருடி யெழுதப்பட்டதென்று அங்கிலேயரேசொல்லும் விவிலியபுத்தகமான பைபிலைப்போதித்து, பேதைப்பெண்கள் சித்தங்கலங்கிடச் செய்கின்றனர். யௌவன மங்கையரைக் கோச்சவண்டியிலேற்றி, கிறிஸ்தவர் செய்யும் பிரசங்கத்திற்கு இட்டுக்கொண்டும் போகின்றனர். இவர்சூதை அறியாத பேதைகளான நம்மவர் அவர் கூறுவதை மெய்யென நம்பி மோசம்போவது என்ன புத்தியீனம்? வீட்டில் பைபில்படிக்கும் செட்டிஸ்திரீகளுக்குப் பாதிரிமார் மாசம் [5] ரூபா தருகின்றனராம். [5] ரூபா வாங்கிக்கொண்டு படித்துக் கிறிஸ்தவச்சிகள் போனவுடனே மோசக்காரியென்று திட்டுகின்றனராம். இந்துமத சித்தாந்தத்தை இப்போதுகூட அறியாத கன்வர்ட்கிறிஸ்தவக்கிழப்பாதிரியின் கைபிடித்து, வீதியில் பலரும் பரிகசிக்க ஒருசெட்டி வாலிபப்பெண் வேஷக்காண்டு கொடுத்தனளாம். வாலிபப்பாதிரிக்குக் கைகொடாது போனது ஒருநன்மைதான். அந்நியதேசத்திலிருந்து பாதிரிமார் பாதிரிச்சிகள் வந்தால், பெண்களைச் சங்காரித்துவரச்செய்து, ஸ்கூலுக்குத் தலைமையானவர் வந்தவிடத்தில் அழகுள்ள பெண்களைக் காட்டி ஏதேதோ இரகசியம் பேசிக்கொள்ளுகின்றனர். சென்னையில் ஓர் இந்துவீட்டில் ருதுவாயிருந்த பெண்ணுக்குக் கல்விகற்பிப்பதுபோல் கற்பித்து அப்பெண்ணை யிட்டுக்கொண்டு போய்க் கிறிஸ்துமதமாக்கிவிட்டதாகப் பத்திரிகைகளிற் பார்த்திருக்கிறோம். "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து,, என்பதுபோல் சிறுவயசில் கற்பிப்பது முதுமையிலும் விடாது. ஆகலால், கிறிஸ்துமதப் பழக்கம் நமது ஜாதி மதத்தைக் கெடுத்துவிடும். இன்னும் நடக்கும் மோசத்தையும் கெடுதலையும் எடுத்துக்கூற இங்கு இடமில்லை. சகோதரர்களே! இதனால் உங்களுக்குச் சொல்வது என்னவெனில், பெண்களைக் கிறிஸ்துமதப் பாடசாலைகளுக்கு அனுப்பவேண்டாம். "முதற்கோணல் முற்றுங்கோணல்,, என்பதற்கிணங்க நமது பெண்களை இளமையிலேயே துர்ப்பழக்கத்திற் பழக்கினால், பிறகு அனர்த்தம் விளையுமென்று நீங்களே அறிவீர்கள். ஆதியில் நகத்தாற் கிள்ளிவிடுவது பின்பு கோடரியால் வெட்டவேண்டுமே. மரத்தின் கோணலைச் செடியில் நிமிர்த்தலாமன்றி மரத்தில் நிமிர்த்தலாமோ? சிறு பெண்களுக்கு இப்போதே நல்ல பழக்கத்தைக் கற்பியாமலிருப்பதோடு, முற்றும் சமயவிரோதிகளான கத்திரிக்கோல்

[illegible]

எண்ணத்தைப்பெற்ற கிறிஸ்தவர் சகவாசமும் செய்வித்து அவர் போதனைக்கும் உட்படுத்தினல், பிறகு நமது பெண்கள் துராசாரம் பெறுவார்களென்பதற்குச் சிறிதும் சந்தேகமா? கிளியை வளர்த்துப் பூனைக்கு இரை கொடுப்பதுபோல, நமது மக்களைக் கிறிஸ்தவர்களுக்குத் தொலைத்துவிடுவது யார்க்குத்தா னிஷ்டமாகும்? ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! மோசம்போகாதீர்கள். சுத்தத்தேனென்றும் விஷங்கலந்ததேனென்றும் அறியுங்கள்! அறிமின்கள்!! தூண்டிலிலுள்ள இரைக்கு ஆசைப்பட்டு, அதைத் தின்னப்போன மீன் படும் பாடும் கெடும் கேடும் அறியாதவர் யாவர்.

ஆரியமதபதுமானி.

ப்ரம்மவித்தியா.

ஸம்ஸ்கிருதபாஷை.

[௧௬௨-ம் பக்கத்தொடர்பு.]

இதிகாசம்.

இதிகாசம் என்னும் சொல்லொன்றுண்டென்பது யாவர்க்குந் தெரிந்ததேயாம். நாம் இப்பொழுது அச்சொற்பொருளின் இலக்கணத்தை எடுத்து விளக்கப்புகுந்தாம். இதுவரையில் புராணங்களின் இலக்கணத்தையும், அவற்றுள்சிலவற்றின்விஷயங்களையும் எடுத்துக்காட்டினேம். ஆதலின், இனிச் சொல்லவேண்டியவற்றுள் இதிகாசவிஷயமே உசிதமுடைத்தென்று எண்ணுகிறேம். இதிகாசம் என்பது முற்காலத்துதித்த புண்ணியவான்களின் சரித்திரங்களை வழியாகக்கொண்டு, மனிதர்களுக்கு வேண்டிய உண்மைப்பொருள்களைத் தெள்ளென விளக்கிக்காட்டுங் கருவியாயும், பௌருஷேயமாயும் உள்ளவோர் நூலாம். ஆயின், இவ்வித இலக்கணம் வேதத்திற் காணப்படும் இதிகாசமென்கிறபாகத்திற்கு ஒத்துவரா. அவ்விடத்து இதிகாசம் என்னும் சொல் இடுகுறித்தன்மையில் மாத்திரம் நின்றதாய் அறிந்துகொள்ளல்வேண்டும். அதுபற்றி, இவ்விலக்கணமமைந்த பல நூல்கள் இதிகாசம் என்கிற சொல்லின் பொருளாய்முடிந்தனவேனும், இந்த இதிகாசம் என்னும் சொல் அதிகமாய் வழங்கப்பெறுவது ஸ்ரீமான் வாதராயணமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய ஸ்ரீமகாபாரதமேயாம். என்னே? அதனையருளிச்செய்தவர் இப்பரதகண்டத்திற் றோன்றிவந்து நிலைபெற்ற எல்லா மதங்களுக்கும் ஆசிரியரும், அந்தந்த மதஸ்தர் தத்தமதங்களின் ஆசாரியரென வழங்கப்படுபவரும், எல்லாமுணர்ந்தவரும், வேதங்களின் உட்கருத்தைத் தெள்ளெனத் தெரிந்துகொண்டவரும், ஒன்றுபட்டிருந்த வேதங்களின்சாகைகளை வகுத்தவரும், புராணங்களின்தொகையைச்சுருக்கினவரும், வேதாசாரியனென்னும் விருதுபூண்டவரும், வேதாந்தசாஸ்திரத்தின் முதலாசிரியருமான முனிவர்மணியாயிருத்தலின். இவர்பெருமையை ஒவ்வொருபுராணங்களின் தொடக்கத்திலும் சூதமுனிவர் எடுத்துக்காட்டியிருக்கின்றார். அங்கும் இம்முனிமணியைப் புகழப் பற்பல வழிகளமைவித்த அமானுஷச் செய்கைகள் நிலைபெற்றிருப்பினும் அங்ஙனம் அவைகளைக்கொள்ளாது எவ்விடத்தும் பாரதம் இயற்றியதே பெரும்புகழாய்க்காட்டப்பட்டது. பெருங்காலமாய்க் கலந்திருந்த வேதங்களைச் சீர்திருத்தியதும், புராணங்களின்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

உண்மையை விளக்கியதும், மற்றெவையும் அவர் மாபாரதத்தாற் பெற்ற கீர்த்தியை விளைவிக்கவில்லை. ஆகவே, யாமறிந்தவளவில் அவரியற்றிய பல நூல்களுள்ளும் சிறந்தது இம்மாபாரதமேயாம். உற்றுநோக்குங்கால் அங்ஙனம் மொழிவதே நியாயமாகும். அதுபற்றியே சிவபுராணத்தில் "நியாயங்களாகிய கயிற்றினாற்கட்டுண்ட புத்தியென்னும் மத்துக்கட்டையால் வேதக்கடல்களைக் கடைந்து, மாபாரதம் என்னும் சந்திரனையெடுத்தார்,, என்றும், "இம்மாபாரதத்தை யியற்றியதால் இவர் ஸ்ரீமந்நாராயணனுக்குச் சமமெனக்கொள்ளவேண்டியது,, என்று பலவசனங்கள் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வுலகத்தில் லோககுரு வென்னும் பெயரும் இம்மாபாரதத்தாற்றானே அம்முனிவர் அடைந்தாரென்பது திண்ணம். இம்மாபாரதமானது நாலு லக்ஷங் கிரந்தங்களைக்குடைத்தாய புராணங்களைப் படிக்கவருந்துமுறும் சிலரை நோக்கியும், ஸ்திரீகள் சூத்திரர் முதலாயினோரை அனுக்கிரகிக்கவும், வேதங்களின் உண்மைகளை விளக்கவுமே செய்தருளப்பட்டது. இதை ஐந்தாம்வேதமெனவும் சொல்லப்படும். ஆராயுங்கால், இது வேதங்களுக்கு ஒப்பானதேயன்றி வேதங்களிற் சேர்ந்ததன்று. அதுபற்றியே பாகவதத்தில் "ஸ்திரீகள் சூத்திரர் முதலாயினோர்க்கு வேதாதிகாரமில்லையென்பதை நோக்கிக், கிருபையால் வேதவியாசமுனிவர் மாபாரதத்தை யியற்றினர்,, என ஓர் வசனம் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வசனத்தினால் வேதத்திற்கும் இம்மாபாரதத்திற்குமுள்ள வேற்றுமை விளங்கிற்றல்லவா.? அவ்வாறே அம்மாபாரதத்தில் ஸ்ரீ வேதவியாசர் வசனத்திலும், ஸ்ரீமத் பிரமதேவா வசனத்திலும் வேதங்களுக்கு முற்றிலும் வேறுபட்ட காவியங்களாக விவகரிக்கப்பட்டிருக்கின்றது. மற்றோரிடத்தில் "பூதங்கள்மேகங்களைக்கொண்டு வாழ்வதுபோல் எல்லாக்கவிகளும் இம்மாபாரதத்தைப்பற்றியே புகழடைவார்,, என்றுள்ளதுங் காண்க. இங்கு இன்னும் சிறிது சுருக்கிக்கூறுவாம். இம்மாபாரதமானது எல்லாப் புராணங்களாலும்புகழப்படுந் தகைமைபெறுதலும், ஸர்வ புராணார்த்தங்களையுந் தம்முளடக்கிக்கொண்டிருப்பதும், எல்லாமதஸ்தராலும் பிரமாணமென்று கொண்டாடத்தக்க ஸ்ரீபகவத்கீதைமுதலிய பலவிஷயங்களடங்கியதுமானது. இவற்றுள், எல்லாப் புராணப்பொருளும் இதில் அடங்கியிருக்கின்றதென்பதற்குப் பிரமாணம் "பதினெண்புராணங்களையும் இயற்றிய முனிவர் அவற்றின் உபபிருங்கணமாய் மாபாரதத்தைக்கூறினர்,, என்பதே. வேதங்களை வகுத்தபின் அவற்றின் வழிநூலான புராணங்களைச்சுருக்கி வேதங்களின் பொருள்களை நன்கு விரிக்கவும், புராணங்களின் விஷயங்களைச் சுருக்கிக்காட்டவும் இந்நூல் இன்றியமையாததே. எல்லாமதஸ்தரும் தத்தம் பாஷியங்களிலும், ஏனைச் சித்தாந்தகிரந்தங்களிலும் பல பாரதவசனங்களை உதாகரிப்பதும், அதன் தாற்பரியத்தைத் தத்தமதங்களுக்கேற்ப வியற்றுக்கொள்வதும், அதில் உள்ள கீதையின் கருத்தைத் தத்தமக்கிசையப் பற்பல பாஷியங்களாகச் செய்துகொண்டதுமே எல்லாவற்றிற்கும் சான்றாகும். இவையெல்லாமிங்ஙனமாகவே, இந்நூல் ஆஸ்திகர்களான நம்மவர்க்கு மிக உபயோகமுள்ளதென முடிந்தது. அதன்விஷயங்கள் பின்வருமாறு காண்க. இதன்பெயர் மகாபாரதம்; ஓரோவிடத்து ஜயம் என்றுஞ் சொல்வதுண்டு. இவற்றுள் மகாபாரதம் என்னும் பதப்பொருளைச் சிறிது விரித்துப் பின்பு ஜயம் என்னும் பதத்தின பொருளையுணர்த்துவாம்.

[illegible]

பாரதகண்டத்திற் பிறந்தவரும், (இந்துக்கள்) பரதராஜன் வமிசத்திற் பிறந்தவரும் பாரதர் எனப்படுவோர்கள். ஆகவே, மகானாகிய பாரதனால் (அதாவது பாரதர்வமிசத்தின் மணியாய வேதவியாசரால்] செய்யப்பட்டதென்றும், அநேக இந்துராஜாக்களின் சரித்திரம் இதிற் காணப்படுவதால், பெரியோர்களாய பாரதர்களைக்குறிக்கும் [அதாவது இந்துராஜாக்களைக்குறிக்கும்] கிரந்தம் என்றும், பரதராஜவமிசத்தின் பேரணியாய தருமபுத்திரனை நாயகனுகக்கொண்டிருப்பதால், மகானாகிய பாரதனைப்பற்றிச்சொல்லும் புத்தகமெனவும்; உள்ளத்தின் இருளையகற்றும் கருவியாதலால் பேரொளியைப்பற்றிநின்றதென்றும், [மகா-பெரிய ஆபா-ஒளி ரதம்-நின்றது] பரதவம்சத்திற் பிறந்த பல அரசரின் சரித்திரம் இதில் அடங்கியிருத்தலால் மகான்களாகிய பாரதர்களைப்பற்றி எழுதப்பட்டதென்றும், பாரதர்கள் [அதாவது இந்துக்கள்] கொண்ட ஐந்து சித்தாந்தங்களை எடுத்து விரித்துக்காட்டும் கருவியாயுள்ளதாதலால், மகத்துக்களாகிய பாரதங்கள் [பாரதர் சித்தாந்தங்கள்] அடங்கியதென்றும், தமது விஷயங்களுக்கேற்பப் பலவிதமாய்க்கொள்ளத்தக்கது. இவ்வாறே ஜயம் என்னும்பதமும் வாசிகமான ஜயத்தைக்கொடுக்கும் பல சாஸ்திரங்களின் உண்மையிருத்தலாலும், காயிகமாய ஜயம் கொடுக்கத்தக்க பல இராஜநீதிகளிருத்தலாலும், மானஸிகமான ஜயம் கொடுக்கும் கீதை, உத்தரகீதை, ஸனத்ஸுஜாதீயம் முதலியவற்றால் நிறைந்திருத்தலாலும் இதற்குத் தகுந்ததேயாம். இப்பதத்திற்கு உண்மையில் [கஅ] என்னும் எண்ணிக்கையும் பொருளாகும். அதுபற்றியே [illegible] "பாரதம் பதினெண் பருவங்களை யுடைத்து,, என்று பாரதத்திற் சொல்லப்பட்டிருப்பது காண்க.

வரும்.

இப்பத்திரிகையின் கக-வது சஞ்சிகை கஎரு-ம் பக்கத்திலெழுந்த தர்மங்கரோது பக்ஷியார் வினாக்களுக்கு விடை.

பக்ஷியாரே!

தாம் வினவிய விஷயங்கள் பலவிருப்பினும், அவற்றுள் "அறிவு ஆன்மா,, என்னும் விஷயமும், "அது தேகதத்துவங்களிற் சேராதது,, என்பதும், "அது தேகாதிஜசங்களின் இச்சையால் அல்ல,, என்பதுமாகிய இம்மூன்றும், "ஜன்மங்களும், சுகதுக்கங்களும் அதைத் தழுவும்,, என்னும் இவ்விரண்டுங்கூடிய ஐந்து விஷயங்களும் நாம் ரு-வது சஞ்சிகை யாதியாக எழுதிவந்த ஓர் உபநியாசத்தாலும், "ஆன்மாவும், சரீரமும்,, என்னும் சங்கதியாலும்விடையளிக்கப்பட்டனவாயின.

[illegible]

ஏனைய இரண்டு விஷயங்கள் அதாவது "பந்தங்களையொழித்து ஆன்மா நிர்மலமாகில் அகண்டபரிபூர்ணசுகமாகியநிலை சித்திக்கு,, மென்பதும், "அந்தப் பரமாத்மநிலை காலத்திரயத்திலும் பிரபஞ்சத்தைப்பற்றுமற் சச்சிதானந்த வடிவாய்த் தானு யிருக்கிற" தென்பதுமாம். இவைகளைக் கிரமக்கிரமமாசப் பத்திரிசையில் எழுதுவோம். இப்பொழுது இதுவிஷயத்தில் தத்தமபிப்பிராயங்களைப் பண்டிதர்கள் வெளிபிடுவார்களென்று அவரது விடைகளையெதிர்பார்க்கின்றோம்.

இப்பத்திரிகையின் அ-வது சஞ்சிகை

௯௰-வது பக்கத்திற் றோன்றிய

சங்கரகுருபக்தப்பிரியர்க்கு

அளிக்கும் விடை.

சங்கரகுருபக்தப்பிரியரே!

நுங் கேழ்விக்கு மேதாவிசளான சில வித்துவான்கள் சமாதானஞ்சொல்வரென்று இதுகாறும் எதிர்நோக்கியும், ஒருவரேனும் இதுவிஷயத்திற் கவலையெடுத்துக்கொள்ளாமையால், நாம் இதற்கு அறிந்தமட்டில் ஓர் சமாதானங் கூறுவாம்.

வடநாடுகளிலே பல ஸ்மார்த்தர்க்ள் வைசாக மாசத்துச் சுக்கிலபக்ஷத்தில் ஸ்ரீமது சங்கரபகவத்பாதாசாரியசுவாமிகள் ஆராதனையை நடத்திவருகின்றார்கள். தென்னாட்டார்மட்டில் இவ்விஷயத்தில் ஒதுங்கியேநிற்கின்றார்கள். ஆயினும், இவர்களும் ஆசிரியர்க்குச் செய்யவேண்டிய விதிகளை முற்றிலும் செய்யாதொழிந்தனரன்று. என்னெனில், அநேகமாய் ஒவ்வோர கிராமங்களிலும் சாதுர்மாசிய மென்கின்ற ஓர் விரதம் ஆரம்பிக்கும்பொழுது, சில சந்நியாசிகளை வரவழைத்து, வியாசபூஜை என ஒன்று செய்வது யாவரும் அறிந்தவிஷயமே.

[illegible]

(120) [illegible]

[illegible]

[illegible]

[illegible]

அவ்விடத்து அத்வைதவித்தையின் ஆசிரியர்களனைவரும் அருச்சிக்கப்படுவார்கள். முக்கியமாய் நான்கு வேதங்களுக்கதிகாரிகளான நான்கு சிஷர்களுடன்கூடிய ஸ்ரீ வேதவியாசமுனிவர் அவதாரபுருஷரெனச்சொல்லத்தக்கபெருமை பொருந்தி நான்கு சிஷர்களோடுகூடிவிளங்கிய ஸ்ரீமது சங்கராசாரியசுவாமிகள், ஸ்ரீமது கௌடபாதாசாரியசுவாமிகள், ஸநகாதியைந்து யோகிகள், பகவத்கீதையென்னும் உத்தம ஞானநூலையியற்றிய ஸ்ரீமதுகிருஷ்ணபகவான், வியூகங்களென்னும் அவரதுபரிவாரங்கள், பஞ்சப்பிரமமூர்த்திகள், பிரமதேவன், சேஷன் முதலாயினோர் பூஜிக்கப்படுகின்றார்கள். அதுகொண்டே ஆசாரியபூஜை முடித்தோமென்று எண்ணிக்கொள்கின்றார்கள். ஆயின், ஒவ்வொருகிரகத்திலும் வருஷந்தோறும் லோககுருவையும், தமது மதாசாரியர்களையும் சிறப்பாக ஆராதிக்கவேண்டுவதே நியாயமாம். அது அசாத்தியமென எண்ணிய சிலர் இந்த ஏற்பாட்டையேற்படுத்தினார்கள். இதையநுசரித்தே ஸ்ரீவைஷ்ணவர்களும் தேவாலயங்களிற்றானே ஆழ்வார், ஆசாரியர்கள் முதலாயினோர் திருவாராதனையைச் செய்கின்றார்கள். இதனால் யாம் அவ்வளவே போதியதெனக்கூறவந்திலேம். ஒவ்வொருவீட்டிலும் செய்தலும் மிக நல்லதே. குருபக்தி பலவித சுகங்களைத்தரவல்லதென்பது வேதங்களினும் வெளியாகுமாதலால், தனாட்டினைநிப்பக்ஷிமான்களாகிய பெரியோர்கள் தத்தமுசிதப்போற் செய்வார்களென்றே நம்புகிறோம்.

மதமும், அதன் பிரயோசனமும், அதன் ஆசிரியரும்.

[௨௭௩-ம்பக்கத்தொடர்பு.]

தோடகாசாரியார் சரித்திரம்.

இதற்குமுன் யாம் எழுதிவந்த இத்தொடர்பிலே ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் சரித்திரத்தையும், அவர்சீடர் முத

[illegible]

லாயினோர் சரித்திரங்களையும் முறையே எடுத்துக்கூறினோம். மேற்கூறிய ஆசாரியசுவாமிகளது மாணுக்கருள்ளே பெருங்கீர்த்தியெய்திய நான்கு மாணுக்கருளர். அம்மாணுக்கருள்ளே தோடகாசாரியாரென்பவரின சரித்திரத்திற் சிலது சொல்லவேண்டியிருத்தலால், அதனை யிவ்விடத்து வெளிப்படுத்துவாம்.

இவ்வாசிரியர் பிறந்துவளர்ந்தவிடம் சங்கரவிஜயங்களில் நன்ருய்ப்புலப்படாமையாலும், அவர் சந்நியாசம்பெற்ற காலமும், அதன்காரணமும் அத்தன்மைத்தாகவேயிருத்தலாலும், அவ்விஷயங்களைப்பற்றி விரிவாக எடுத்துக்கூருவிடினும் அறிந்தமட்டில் அவரதுசரித்திரத்திற்சிலவற்றை இவ்விடத்திலே எழுதுகின்ரும். இவர், ஆசாரியசுவாமிகளது மாணுக்கருள்ளே குருபக்தியின் மிகச்சிறந்தவரொன்று யாவராலும் புகழும்படி கீர்த்திபெற்றவர். இவரது சந்நியாச சம்பிரதாயப்பெயர் ஆனந்தகிரியெனப்படும். ஓர்காலத்தில் இவர் தமதுகுருவாகிய ஸ்ரீமத்சங்கராசாரியசுவாமிகளாஞ்ஞையால் வெளிச்சென்றிருககுஞ் சமயத்தில், ஏனைய மாணுக்கர்களெல்லோரும் ஆசாரியசுவாமிகளிடத்திலே பாடம்படிக்கும்படி முயல, அப்பொழுது அவ்வாசாரியசுவாமிகள் ஆனந்தகிரிவர்தபின்பே படிக்கவேண்டுமென்று ஆஞ்ஞாபித்தார். அதுகண்ட அம்மாணுக்கர்கள் ஞானசூனியனுன ஆனந்தகிரியின் வரவையெதிர்பார்க்கப் பிரியமற்றவராய், ஆசாரியனது ஆஞ்ஞைக்குமாத்திரம கட்டுண்டவராய்நிற்ப, அதனையுணர்ந்த சுவாமிகள் அவ்வானந்தகிரியினிடத்தே கருணைமாரி பொழிந்தருளினுர். உடனே அவரும் தம் பணிகளை முடித்துக்கொண்டு, ஆசாரியனையடைந்து அவரது பாதங்களிற் பணிந்து, ''தோடகம்,, என்கின்ற ஓர்வகைச் செய்யுட்களால் அத்வைத நூல்களின் உட்கருத்தை வெளியிட, அதனுல் அவருக்குத் ''தோடகாசாரியர்,, என்னுங் காரணப்பெயருண்டாயிற்று. பின்பு தோடகாசாரியார் தமது ஆசிரியரின் திருவருட்பிரசாதத்தால் அவர் திருவாய்மலர்ந்தருளிய பல பாஷியங்களுக்கும் பல உரைகளை யியற்றினுர். அவைகள் இப்பொழுதும் ''ஆனந்தகிரீயம்,, என்னும் பெயரால் வழங்கப்பட்டுவருகின்றன. அந்தோ! இவை இங்ஙனமிருக்க, கலியின் கொடுமையால் இத்தோடகாசாரியருடைய உண்மையையறியாது, ஸ்ரீமத்சங்கராசாரியசுவாமிகளது சரித்திரத்தைக் கெடுத்துவரும் பல காரணங்களால், மாத்துவவைஷ்ணவவம்சஸ்தரான ''அனந்தானந்தகிரி,, யென்பவரே இவ் வத்வைதாசாரியமணியாகிய தோடகாசாரியரென்று மயங்குவோர் பலர் தென்னுட்டிலிருக்கின்ருர்கள். அவர்களுக்குற்ற இம்மையலையொழிக்கவேண்டிப் பல பண்டிதர்கள் பலகிரந்தங்களை யெழுதியிருக்கின்ருர்கள். அவைகளைப் பார்க்கவிரும்புவோர்க்கு அவை எடுத்துக்காட்டப்படும். அவர், தாம் எழுதிய புத்தகத்தில் ''போஜராஜன்சபையிற் காளிதாசன்போல்,, என எழுதியது ஒன்றே அவர் ஆசாரியசுவாமிகள் காலத்துக்குப் பின்னிட்டு வெகுகாலங்கழித்துப் பிறந்தவரென்பதை வெளியாக்கும். இதுநிற்க; இன்னும் பலர் ஆசாரியசுவாமிகளுடைய சிஷர்களென்று பெயர்பெற்றிருக்கின்றனர். அவர்கள் ஆசாரியசுவாமிகளுடைய பாஷியத்துக்கு அநேக உரைகளையியற்றியிருக்கின்ருர்கள். அவர்களுள்ளே ''சித்சுகாசாரிய,, ரென்பவரொருவர். அவர்கள் சரித்திரங்கள்மட்டில் எங்கும் ஆராய்ந்தும் அறிந்திலேம்.

இன்னும் வரும்.

ப்ரம்மவித்தியா

அனுபந்தம்.

பத்ரிகா:.

பத்ரிகாப்ரேஷகாபிப்ராயாணாம் பத்ராதிபோ ந ப்ரதிபூ:.

வைதிகஸித்தாந்தரத்நாவளீ.

ஆர்யா: !

அஷ்டோத்தரஶதோபநிஷதாம் ப்ராமாண்யாப்யுபகமேபி நாராயணஸ்யைவ துரீயோ நாபலாப:, ந ச தத்ர ப்ரமாணாபாவ:. ஶ்ரீராமஸ்ய மூலகாரணத்வஸாதகாநாம் ஶிவஸ்ய ராமாபேக்ஷயா நிக்ருஷ்டத்வஸாதகாநாம் ச ராமதாபிந்யுபநிஷத்கத த்விதீய த்ருதீயகண்டஸ்தாநாம் வாக்யாநாமந்யதமஸ்ய ஶிவமத்வைதம் சதுர்தம் மந்யந்த இதி வாக்யஸ்ய, ததா நாராயணஸ்ய ஸர்வோத்க்ருஷ்டத்வஸாதகாநாம் நாராயணாபேக்ஷயா ஶிவஸ்ய நிக்ருஷ்டத்வஸாதகாநாம் ச ஸுபாலோபநிஷத்வாக்யாநாமந்யதமஸ்ய யோ ப்ரஹ்மணி யோ ருத்ரே யோ விஷ்ணாவிதி வாக்யஸ்ய, நாராயண: ஸமோ ரஜோகுணப்ரதாந இத்யாதி த்ரிபாந்நாராயணோபநிஷத்வாக்யஸ்யாபி ப்ராமாண்யஸ்வீகாராத். கிந்து "ஶிவமத்வைதம் சதுர்தம் மந்யந்தே" இதி மாண்டூக்யோபநிஷத்வாக்யம் ஶிவஸ்ய துரீயதாம் ஸாதயதீதி. ந சைதத்ஸமஞ்ஜஸம். அஸ்ய வாக்யஸ்ய ஶ்ரீராமதாபிந்யாமுபலப்ததயா ஶ்ரீராமஸ்யைவ ஸர்வகாரணத்வப்ரதீதே: தத்ர ப்ரதிபாதிதஸ்யாஸ்ய ஶ்ரீராமோத்தரதாபிந்யாம் நிஶ்சிதாயாம் தஸ்யைவ வாக்யஸ்யாந்யத்ராபி விஷயத்வநிர்ணயஸ்ய யுக்தத்வாத். யுஜ்யதே ஏவ ஹி நிர்ணீதார்தஸ்ய வாக்யஸ்யாந்யத்ராபி தஸ்மிந்நர்தே ஸாமஞ்ஜஸ்யோபாய:. அதஏவ "ஶிவ: ஶுத்த:" இதி பதஸ்ய ஶிவ அர்தம் வ்யாசஷ்டே. யதுக்தம் "துரீயமக்ஷரமாதித்யோ விஷ்ணுரீஶ்வர:" இதி ப்ரஹ்மோபநிஷத்வாக்யம் ஶிவஸ்ய துரீயத்வஸாதகமிதி தத்ர ந, அக்ஷரமாதித்ய நாராயணைக நிஷ்ட ரூடவிஷ்ணுபதகதிதஸ்ய ஶிவாஸாதாரணபதாபாவாதிதஸ்யாஸ்ய வாக்யஸ்ய நாராயணவாசகத்வே ந ஶிவவாசகத்வ யோக்யதா. யதவிஷயத்வாதிதீ தேஷாம் வாக்யம் ஶிவதுரீயத்வஸாதகமிதி சதுவிந. உதாஹ்ருதவாக்யே ந ஶிவதுரீயத்வபோதநேந தஸ்ய தாத்பர்யகதரஹாவாத். இதி திக். அதஏவ ஶ்ரீமச்சங்கராசார்யா

கடிதங்கள்.

கடிதர்கள் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

வைதிக சித்தாந்த ரத்னாவளி.

ஐயா,—நூற்றெட்டு உபநிடதங்களையும் பிரமாணமென்று ஒப்பினும் அவற்றால் நாராயணனே துரியமூர்த்தியாய்ச் சித்திப்பது திண்ணம். அதிவிஷயத்தில் பிரமாணங்கள் பலவுள. ஸ்ரீராமனே அனைத்திற்கும் மூலகாரணமென்றும், உருத்திரன் முதலிய ஏனைய தேவர்கள் அவரினும் தாழ்ந்தவரென்றும் எடுத்துக்காட்டப் புகுந்த ஸ்ரீராமதாபினியென்னும் உபநிடதத்தின் ௨-வது ௩-வது கண்டங்களிற்காணப்பட்ட [ஶிவமத்வைதம் சதுர்தம் மந்யந்தே] அத்து[illegible]னன சிவனை நான்காம்பொருளாக எண்ணுகிறார்கள்,, எ[illegible]வெளிவந்த வாக்கியத்தாலும், அவ்வண்ணமே ஸ்ரீலக்ஷ்மிபதி[illegible]ய பரதத்துவமென்றும், ஏனைக் கடவுளர் அவர்க்கிணையாகார்[illegible] அவரினும் தாழ்ந்தவரே என்றும் வலியுறுத்தவந்த சுபாலோப[illegible]டதத்தில் (யோ ப்ரஹ்மணி யோ ருத்ரே யோ விஷ்ணௌ) "எவன் பிரமனிடம் உள்ளான் எவன் விஷ்ணுவினிடம் உள்ளான் எவன் உருத்திரனிடம் உள்ளான்,, எனத் தொடங்கிய வசனங்களாலும், (நாராயண: ஸமோ ரஜோகுணப்ரதாந:) "நாராயணன் சமமாயுள்ளவரும் ரஜோகுணப்பிரதானரும்,, என்பதாதியாய திருபாத்நாராயணோபநிடத வசனத்தாலும் அவ்வுண்மை வெளியாகும். அங்ஙனமாயின், (ஶாந்தம் ஶிவமத்வைதம் சதுர்தம் மந்யந்தே) "சாந்தியினிடமாயும் அத்துவிதனுயுமுள்ள சிவனை நான்காம்பொருளாய் எண்ணுகின்றனர்., என்று மாண்டூக்கியோபநிடதமுரைத்த லெவ்வாறு பொருந்துமெனின், இதே வாக்கியம் ராமதாபினி யென்னு முபநிடதத்திலுமுள்ளதாதலாலும், அவ்விடத்து ஸ்ரீராமனே பரதத்துவமென வெளியாவதாலும், இவ்வாக்கியம் ஸ்ரீராமனையே குறிக்குமென்று சொல்வதே நியாயமாம். ஓரிடத்தே ஒரு வாக்கியத்தின் பொருள் ஒருவிதம் துணியப்படுமாயின், மற்றவிடங்களிலும் அவ்வாக்கியம் அப்பொருளையே உணர்த்துவது அவற்றின் இயல்பன்றோ? அதுபற்றியே "சிவன்-சுத்தன்,, என்று ஆனந்தகிரியாசிரியர் பதவுரை பகர்ந்தாரெனக் கொள்ளுக. அன்றியும் (துரீயமக்ஷரமாதித்யோ விஷ்ணுரீஶ்வர:) "துரியம் அழிவற்றது. ஆதித்தியனும் விஷ்ணுவும் ஈசுரனுமாயுள்ளது,, என்னும் பிரமோபநிடத வசனமும் சிவனுக்குத் துரியமாந்தன்மையை விளக்கும் என்பது ஆராயுங்காலத் தகையாவாம். அஃதெங்ஙனமெனில், ஸ்ரீமந் நாராயணனையே குறிக்கும் வலிமை பெற்று அவருக்கே இடுகுறிப்பெயராகிய விஷ்ணுவென்னும் சொல் இவ்வாக்கியத்தி லிருப்பதாலும், சிவனைக்குறிக்கும் சொல்லே யில்லாமையாலும், இவ்வாக்கியம் ஸ்ரீஹரியே தமதுட்பொருளென விளக்குகின்றது. இங்ஙனமே அதர்வசிகை

[illegible]

யில் ([illegible])"ஈசானனைத் தியானிக்கக்கடவது,, என்பதாதிய வசனங்களும் சிவனையே துரியப்பொருளென்று விளக்க வலிமை பெற்றன வன்று. அவ்வாக்கியத்தில் சிவன் துரீயன் என்கின்ற சொல் இல்லாமையானென்றறிக. அது ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் ஸ்ரீஹரியின் திருநாமங்களுக்கு உரை செய்யும்பொழுது கேசவன் என்னும் சொல்லுக்கும சதுராத்மா என்னும் சொல்லுக்கும் பொருளுரைக்குங்கால், ஸ்ரீமந் நாராயணன் துரியப்பொருள் என்று எழுதினுர் என்பதும் ஆராய்ந்தறிக. இவ்வாறு அவ்வாசாரியசுவாமிகள் ஓரிடத்தாவது சிவன துரியமூர்த்தியெனச் சொல்லவுமில்லை. இஃது அவர் எழுதியதாய்த் துணியப்பட்ட பாஷியங்களில் இந்தமட்டில் யாம ஆராய்ந்தறிந்ததேயாம். யாமோ வேதத்தின் உண்மையை யநுசரித்த ஸ்ரீமத்சங்கராசாரியசுவாமிகள் சித்தாந்தத்தைக்கொணடவர். இது நிற்க;

நூற்றெட்டுபநிடதங்களுளொன்ருயும் சாமவேதத்தைச் சார்ந்ததாயும் உள்ள வாசுதேவோபநிடதத்தில் வைதிகப்பிராமணரெல்லோருக்கும் ஊர்த்துவ புண்டரம் சொல்லப்பட்டதேயன்றி, வேறெவ்கும் வைதிகர்களான பிராமணர்களுக்குத் திருநீறு சொல்லப்படவில்லை. பிருஹஜ்ஜாபால முதலிய வுபநிடதங்களிலோ சைவம் என்றும், சாம்பவம் என்றும், பாசுபதமென்றுந் தொடங்கிய பதங்களால் திருநீறு தரித்தலைக் குறிதலின், அஃது சைவதாந்திரிகர்களுக்கே உரியதெனவும், வைதிகர்கள் அதற்கு அதிகாரிகளல்லரெனவும் விளங்குகின்றது. அங்ஙனமே உருத்திராக்ஷஜாபாலம், பஸ்மஜாபாலம் என்னும் இவ்விரண்டு உபநிடதங்களிலும் வெண்மைநிறமுள்ளவுருத்திராக்ஷமே பிராமணர் தரித்தற்குரியதென்று சொல்லபபட்டதேயன்றி மற்றொன்றும், அதாவது கரிய நிறத்தையுடைய வுருத்திராக்ஷந் தரிக்கும்படி சொல்லப்படவில்லை. அன்றியும் ([illegible])"சர்வவியாபகராயுள்ள மகாவிஷ்ணுவினது ஸர்வாங்கத்திலும் விளையாடுவதும், அளவற்ற சௌந்தரியம் லாவணியம் முதலியவற்றின் அதிட்டானதேவதையும், அறிவு சுகம் என்று அபின்னரூபமுடைய அனந்தன் முதலிய பரிசனங்களால் சேவிக்கப்பட்டதும், ஸ்ரீலக்ஷ்மிதேவியின் தோழியுமாகிய துளசியைத் தியானித்து,, என்று தொடங்கிய திருபாத்நாராயணோபநிடத வசனத்தால் "பிரமலோகம் ருத்திரலோக முதலிய எல்லா லோகங்களிலும் மேலான துளசிவைகுண்டத்தை விஷ்ணுசேவகன் பெறுவான்,, என்றும் உள்ள வாக்கியங்களால் துளசி ஸ்ரீஹரிக்கு மிகப் பிரியமாயுள்ளது என்றும் அதை ஹரிபக்தர்கள் தரிக்கவேண்டியது என்றும் வெளிப்படுகின்றது. அதுகொண்டே மற்றைத் தேவர்களுக்குப் பிரீதியாய எப்பொருள்களினும் இது மிகச் சிறந்ததென்று அநேகமாய் ஸ்ரீ ஹரிவசன வாக்கியத்தால் வெளியாகும். அதுவிஷயத்தில் பிரமாணங்கள் அடியில் வருமாறு காண்க. "துளசிகாஷ்டமாலை கழுத்தில் தரிப்பவன் அநாசாரமுள்ளவனேனும் என்னையே அடைவான். துளசிமாலையணிந்தவனுக்கு வேண்டிய சர்வ பலங்களையும் அளிப்பேன். துளசிமாலையணிந்து ஓர் புண்ணியஞ்

[illegible]

நம்மவர் கவனிப்பு.

நமது இந்துமதம் பூர்வீகமாகவே சிறப்புற்று ஓங்கி வளர்ந்துவருவது உண்மையே. இதை அங்கிலேயஜாதியிலுள்ளவரும் கூறுகின்றனர். இவ்வாறிருக்கச் சில நூறு வருஷங்களுக்குமுன் நவீனமாய்த்தோன்றிய ஆபாசத்திலும் ஆபாசமான மிலேச்சக் கிறிஸ்துமதமானது, கவர்ன்மெண்டு பலத்தாலும், பொருளின் சகாயத்தாலும், ஒற்றுமை வலியாலும், விடாமுயற்சியாலும் இத்தேசத்தில் நுழைந்து, இம்மைப்பயனுன சுகபோகங்களைக்காட்டி, சுமார் 25. லக்ஷம் ஜனங்களைத் தன் சார்பாக்கிக்கொண்டது. இதைச்சுட்டிக் கவலைப்படுபவர் நம்மவரில் யாருமில்லை. இது மகமதீய அரசல்ல; அங்கிலேயர் அரசே. யார் எந்த மதத்தையேனும் அநுசரிக்கலாகும். இதைப்பற்றிக் கவர்ன்மெண்டார் கவனிப்பதில்லை. சட்டம் யார்க்கும் ஒன்றுதான். பக்ஷபாதமில்லை. கிறிஸ்தவர் நம்மவரைக் கிறிஸ்தவராக்க எவ்வளவு பெருமுயற்சி புரிகின்றனரோ, அதற்கிரட்டிப்பாக அம்மதத்திற் பிரவேசியாதிருக்கவும் நாம் செய்யக்கூடும். எவனேனும் கிறிஸ்தவனுய்விட்டால் அவன் கெட்டான் பிரஷ்டன் இனி யவனை நம்மில் ஒருவனுகச் சேர்க்கப்படாது என்று கூறுகின்றனர். இவ்வாறே 25. லக்ஷம் பேரையு மிழந்துவிட்டோம். (நம்மவர் அயல் மதத்திற்சென்று பின்பு நமக்கே விரோதிகளாக எழும்புவதை யுணரும் விவேகிகள் ஒருவரையும் காணோம். சென்ற வருஷத்தில் திருவையாறு [பஞ்சநதம்] என்னும் ஸ்தலத்தில் ஓர் வீதியில் பாதிரி ஒருவர் மாதாகோவில் கட்டிக்கொண்டு, அவ்விடத்தில் [3000] கிறிஸ்தவரைத் தடிதாம்போடு திருவித்து, அவ்வழியே மேளதாளத்தோடு சுவாமி போகப்படாதென மறித்ததைக் கேழ்வியேனும்பட்டதில்லையோ?) அக்கிறிஸ்தவர் நமது மதமாயிருந்தால் நமக்கு விரோதமாக எதிர்ப்பரோ? இவ்வாறே நமதுமதஸ்தர் நாடோறும் கிறிஸ்துமதஸ்தராய்க்கொண்டுவந்தால், அது நமக்கே பெருந்தீமையுண்டாகுமல்லவா? கிறிஸ்துமதம் நாளொருமேனியும் பொழுதொருவர்ணமுமாக வளர்ந்துவருவதும், இந்துமதம நாளுக்குநாள் க்ஷீணித்துப்போவதும் நமக்குப் பலவீனமல்லவா? நமது மதம் சிறிது சிறிதாய்த்தேய்ந்து ஒருகாலத்துப் பூச்சியமாகுங்கால், கோவிலெங்கே? குளமெங்கே? மடமெங்கே? வேதசாஸ்திரங்களெங்கே? வருணசிரமதருமமெங்கே? சரியைகிரியை யோக ஞானங்களெங்கே? எல்லாம் பறக்குமென்பதில் ஏதேனும் சந்தேகமா? கலியுகத்திற்கேற்க மிலேச்சமதம் விருத்தியாகின்றதே. நம்மவர் இவ்விஷயத்தைப்பற்றிச சற்றேனும் சிந்திக்கின்றாரில்லையே. திருநெல்வேலிஜில்லாவில் வெகுபேர் கிறிஸ்தவராய்விட்டனரே. இதுநிற்க; பாதிரிகளுக்குப் பணம் அபரிமிதமாக வருகின்றமையால் அதைக்கொண்டு கல்விச்சாலை வைத்தல், போதகரைக்கொண்டு பிரசங்கித்தல், ருசியுள்ள ஊட்டங்கொடுத்தல், பெண்களைக்காட்டல், சிறு பத்திரிகை, புத்தகம் பரவவிடுதல், உத்தியோகங்கொடுத்தல் முதலிய காரியங்கள் செய்து கிறிஸ்தவராக்கின்றனர். இந்தப்பட்டணம் யாருடையதென்று ஆலோசிப்பவர்க்கு நமதென்றே விளங்குமல்லவா? இத்தேசத்திலிருந்து வருஷாவருஷம் அங்கிலேய தேசத்திற்குச் சுமார் 75. கோடி ரூபா வரையில் போய், அங்கிருந்து சில தொகை கிறிஸ்துமதயாக்கு வருகின்றன. நமது பணமே நம்மை நாசஞ்செய்ய வருகின்றதைப் பாருங்கள். இதை நமது சமயாபிமானிகள் கவனிக்கவேண்டுமென்று கருதவில்லையே; மதத்தைக் காக்கும்பொருட்டே ஏற்படுத்தப்பட்ட மடத்தார் யாது புரிகின்றனர்? சமயப்பிரசங்கிகள் வெளிப்படுகின்றனரா? நம்மவர்க்கு அணுத்துணையும் அபிமானமென்பதில்லையே. இங்ஙனம் இனிச் சும்மா [50] வருஷமிருப்போமாயின் இத்தேசம் கிறிஸ்துமதவனமாய்விடுமே. மும்மீன் கதையில் வருமுன் காக்குமீனுக்கிருக்கும் எதிர்கால புத்தி நமக்கிருக்கிறதா? வருகிறபோது காக்கும் நிகழ்காலமீனுக்கிருக்கும் நிகழ்கால புத்தியேனு மிருக்கிறதா? மதாபிமானமிருக்கிறதாக மேலுக்குச்சொல்வதில் பயனென்னை? ஒவ்வொருவரும் அவரவர்க்கியைந்தபடி ஒருபையேனும் குறைந்தது தரவேண்டும்; சபைகள் கூடவேண்டும்; மதக்கிரந்தங்களை வாசிக்கவேண்டும்; தத்துவவிசாரம செய்யவேண்டும்; நமது சாஸ்திரங்களிலுள்ள

செய்தால் பிதிர்களுக்கும் தேவதைகளுக்கும் அளவில்லாப் பிரீதி யுண்டுபண்ணும்,, என்பதாம். இவ்வாறு வேதங்களுக்குச் சமமான பகவானுடைய வசனங்களிருத்தலாலும் அது சாஸ்திரீயமென்று ஏற்பட்டது. "குமிசகன் வெண்ணிறங்கொண்ட திருமண்ணால் ஊர்த்துவபுண்டரந் தரிப்பான்,, என்று சங்கியா சோபநிடதத்தில் இருப்பதால் அது வைதிகமென்பது திண்ணம். அதுவிஷயத்தில் ஸ்ரீமந்நாராயணன் திருவாய் மலர்ந்தருளிய பாஞ்சராத்திரசாஸ்திரமும் பிரமாணமே. பத்மாக்ஷதாரணவிஷயத்தில் அக்ஷமாலிகோபநிஷத்து பிரமாணமென்று ஒருவர் எழுதியதும் கூடாது. ஏனெனில், அவ்வுபநிடதத்தில் தாமரையணிகளைக்கொண்டு எண்ணிக்கைமாத்திரம் விதிக்கப்பட்டதேயன்றி வேறு தாரணம சொல்லப்படவில்லை. மேலும் "[illegible]" என்று இருப்பதால் உருத்திரன் பிரமம் என்று வெளியானதா யெழுதியதும் சாந்தோக்கியம் எனனும் உபநிடதத்தைப பாராமல் எழுதியது என்றே நினைக்கிறோம். அவ்வுபநிடத்தில் "ஏகமேவாத்விதீயம்" என்றே யிருக்கின்றது. "ப்ரஹ்ம" பிரமம் என்கிற பதம் இல்லை. இதன்மேல் எழுத விரும்புவோரை ஒருவாறு யாம் எடுத்துக்காட்டிய உபநிடதங்களைப் பார்க்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். விரிவஞ்சி உபநிடதங்களை முற்றிலும் எடுத்து உதகரிக்காதொழிந்தாம். வேதப்பிரமாணத்தையும் ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் சித்தாந்தத்தையும் அநுசரித்து எழுதிய இந்த வசனங்களை மாற்சரியமற்ற வித்துவான்கள் பரிசீலனம் செய்வார்களாக. வரும்.

வேதோக்தசித்தாந்தத்தை வெளியிடவந்தவனும் நடுவுநிலைமை நாடுபவனுமான ஓர் வேப்பத்தூர்வாச, பண்டிதன்.

மொழிபெயர்ப்பு.

பூகார்த்தவாதம் குணர்த்த வாதங்களை யுணரவேண்டும்; முன்பினுள்ள விரோதங்களைப் பண்டிதரைக் கேட்டுச் சமாதானம் தெரிந்துகொள்ளவேண்டும்; பட்டணங்களிலும் கிராமங்களிலும் சென்று கிறிஸ்தவர் நமது மதங்களைக் கண்டிப்பதுபோல நாமும் கிறிஸ்துமதத்தைக் கண்டித்து நமது மதத்தை ஸ்தாபிக்கவேண்டும்; நம்மவர் எங்கும் ஸ்கூல்கள் வைத்து அவர் பைபில் வைப்பதுபோல் நாமும் நமது மதபாடங்களை வைக்கவேண்டும்; நமது சிறுவர்களுக்கு நமது சமயாசாரங்களையும் சமய உண்மைகளையும் கற்பிக்கவேண்டும்; இன்னும் இவைபோன்ற பற்பல காரியங்களைச் செய்யவேண்டும். இவ்வாறு செய்துவருவோமாயின் நமது மதஸ்தர் அந்நியத்திலும் அந்நியமான கிறிஸ்துமத விரயத்தில் அழுந்தார்கள்.

இப்படிச் செய்வதற்கு மதாபிமானமும், தளராமுயற்சியும், பொருளும் வேண்டிய. இதற்கு மடாதிபதிகள் ஏற்பட்டால் யாவும் கைகூடும். சமயத்தை நிலைநிறுதத அல்லவா ஆதியில் அவரேற்பட்டது? இப்பொழுது அவர் ஒன்றும் செய்கின்றாரில்லையே. மடத்திலுள்ள சொத்துகள் சமயாபிவிர்த்தியின் பொருட்டுச் செலவாகின்றனவா? சுயப்பிரயோசனத்திற்காகச் செலவாகின்றனவா? என ஆராயின் பெரும்பான்மையும் சொந்தப் பிரயோசனத்திற்கே செலவாகின்றனவென்று சிறிதும் சந்தேகமின்றிக் கூறலாம். கோவில்களுக்கும் அநேக சொத்துகளிருக்கின்றன. மடச்சொத்துகளைக்கொண்டும், கோவிற்சொத்துகளைக் கொண்டும் அநேக வித்தியாசாலைகள் நியமித்து மதபாடங்கள் வைத்து மதாபிவிர்த்தி செய்யலாம். நமக்கு விவேகமில்லாவிட்டாலும் பாதிரிகளைப்பார்த்தாயினும் கற்றுக்கொள்ளலாமே; அவர் நமக்கு யாவும் பாடங்கற்பிக்கின்றனரே; கற்பித்தும் நமக்குப் புத்தியில்லையே; ஷெ மாதிரி எங்கும் ஸ்கூல்கள் வைத்து மத பாடம் ஏற்படுத்தி மதாபிவிர்த்தி செய்வோமானால், தனவான்களெல்லாம் பொருள் சகாயம் செய்வார்களே.

இது நிற்க;

எங்கும் நம்மவர்க்கு அணு அணுவாக அபிமானமுண்டாகி வருகிறது. பொதுவிஷயத்திலும் சமயாபிவிர்த்தி விஷயத்திலும் கவனஞ் செலுத்துகின்றனர். பாருங்கள் சில மாசங்களுக்குமுன் கோயமுத்தூரில் ஓர் சபையில் இந்துமதத்தைத் தூஷித்துப் பாதிரியார் பிரசங்கம் செய்ததை அக்கிராசனாதிபதியாயிருந்த ம-ா-ா-ஸ்ரீ நரசிம்முலுநாயுடு அவர்கள் எழுந்து அத்தூஷிப்புக்குச் சமாதானஞ்சொன்னதோடு, கிறிஸ்துமத ஆபாசங்களையும் எடுத்துக் காட்டினார்; நேற்று கொள்ளேகாலத்தில் நமது மதத்தைத் தூஷித்த பாதிரியாரை ம-ா-ா-ஸ்ரீ துரைசாமிமுதலியாரவர்கள் கண்டித்து நமது மதத்தை ஸ்தாபித்துக் கிறிஸ்துமதங் கற்பனாமதமெனவுங் கூறினார்; சில மாசங்களின்முன்னர் ப்ரம்மஸ்ரீ. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்கள் திருநெல்வேலியில் கிறிஸ்துமத கண்டனம் நாஸ்திகமத கண்டனம் என்று நோட்டீசு வெளிப்படுத்தி முதலில் கிறிஸ்துமத கண்டனஞ் செய்யும்போது, அச்சபையில் வந்த கிறிஸ்துமத போதகர் யாதொன்றும் பேசாதிருந்து, நாஸ்திகமத கண்டனம் செய்யும்போதுமாத்திரம் சில ஆக்ஷேபங்கள் செய்ய, சாஸ்திரியாரவர்கள் விடையளித்ததைக் கேட்டுப் பதில்பேசாது சென்றனர்; சிலநாளைக்குமுன் பழனியில் சைவப்பிரசங்கி ஒருவர் பிரசங்கம் செய்வதாய் நோட்டீசு வெளிப்படுத்த, பாதிரியார் வழக்கமாய்ச் செய்யும் கிறிஸ்து பிரசங்கத்தை நிறுத்திவிட்டார்; கோவைக் கூனைக்குடுமி என்னும் ஓர் நிருபநேசர், கோயமுத்தூர் தாலூகா கோபிற்பாளையத்தில் கிறிஸ்துமதப் பாதிரியாரிடம் சில கேள்விகேட்கும்படி அனுப்பிய பையனுக்கும் போதகர்க்கும் நிகழ்ந்த வாதத்தில் போதகர் உலகத்திற்கு முதற்காரணம் இன்னதெனக் கூற வகையில்லாது மறுநாள் பேசலாமெனக் கம்பி காட்டினாரென இந்துஜநபூஷணி மேமீ 6-உ கூறுகின்றது.

சென்னையில் சில மாசகாலங்களாக ஆங்காங்குள்ள இந்து சமயிகள் கிறிஸ்துமத கண்டனமாக நடுத்தெருவில நின்று பிரசங்கம் புரிகின்றனர்; கண்டன புத்தகங்களும் சிறுபத்திரிகைகளும் பிரசுரம்செய்து உள்ளூரிலும் வெளியூரிலும் எள்ளுபோலிறைக்கின்றனர். பாதிரிமாரும் போதகரும் தலைகாட்டுவதில்லை. இந்துக்கள் பரவாத இடங்களில் பதுங்கிப்பதுங்கிப் பிரசங்கம் செய்கின்றனர். அங்கும் இந்துக்கள் சென்று பிரசங்கஞ் செய்தால் கிறிஸ்தவர் ஓட்டம்பிடிக்கின்றனர். முன்போலில்லை; இந்துக்கள் கிறிஸ்தவரைப் பற்பலவிதமாக ஆக்ஷேபஞ் செய்கின்றனர்; அவர் பதில்மாத்திரம் தருவதில்லை. திருக்கழுக்குன்றத்து உற்சவத்தில் ஓர் இந்து சிறுவர் கிறிஸ்தவரைக் கேட்ட கேள்விகளுக்கு கிறிஸ்துபோதகர் ஒன்றேனு முத்தரவு சொல்லாமல் போனார். அவ்விடத்தில் கிறஸ்தவர் பிரசங்கம் இவ்வருஷம் தலையெடுக்கவில்லை. கிறிஸதவர் இந்தப்பக்கம் கண்டித்தால் அந்தப்பக்கமும், இன்று கண்டித்தால் நாளையும் பிரசங்கம் செய்கின்றனர்; அவர்க்கு வெட்கமென்பது கிடையவே கிடையாது. சம்பளத்திற்கு எப்படியானாலும் பேசவேண்டியிருக்கிறது. பிரசங்கம் செய்யும் போதகர்க்கு வெட்கமுண்டாகி, இப்படிப்பட்ட பிழைப்புப் பிழைப்பதைக்காட்டிலும் அவமானம் வேறில்லையெனக் கூறுவதனோடு வேறு ஜீவனமில்லையே யாது செய்வதென மனம் வெறுத்துக்கொள்ளுகின்றனர். இக்காலத்தில் ஜீவனம் பெரிதாயிருக்கின்றமையால் எப்படியானாலும் ஜீவிக்க வேண்டியதாயிருக்கின்றது. நமது தேசத்தில் கைத்தொழிற்சாலை விருத்தியானால் யாரும் கிறிஸதவராகவே மாட்டார்கள். இது நிற்க;

சென்னையில் இப்போது கிறிஸ்துமத கண்டனமாகச் சபைகளும், பத்திரிகைளும், பிரசங்கங்களும் எப்படி உற்பத்தியாகின்றனவோ, அவ்வாறே ஒவ்வொரு ஊர்களிலும் உற்பத்தியாகவேண்டும். இல்லாவிடில் நம்மதத்திற்கு ஆபத்து வந்துவிடும். இப்போது கிறிஸதவரானவரில் அநேகர், அம்மதத்தின் ஆபாசங்களை யுணர்ந்து மீண்டும் இந்துசமயிகளாகவே அபேக்ஷிக்கின்றனர். நம்மவர் அவர்க்கு இச்சமயம் கைகொடுக்கவேண்டும். அவரவர் அந்தந்த ஜாதியிலிருந்தே இந்துசமயங்களை அனுசரிக்கலாம். பாதிரிகள் பகீரதப் பிரயத்தனம் செய்வதைப் பார்க்கிறோம். நாமோ அவ்வளவு கஷ்டப்படவேண்டுவதில்லை. இது நிற்க;

பாதிரிகளுக்கு விரோதமாகப் பிரசங்கம் புரிந்தால், கவர்ன்மெண்டுக்கு விரோதம் வருமென நாட்டுப்புறத்தவர் நினைப்பார்கள்; இது சுத்த புத்தியீனம். சட்டம் எல்லார்க்கும் ஒன்றுதான். சர்க்கார் ரோட்டில் [30] அடிக்குத் தூரநின்று பிரசங்கிக்கவேண்டும். பாதிரி நமது மதத்தைத் தூஷிக்கும்போது நாம சும்மாயிருக்கலாமா? இப்படிச் சேலத்தில் ஒரு பாதிரி, இந்து பிரசங்கியை மாஜிஸ்ட்ரேட்டினிடம் கொண்டுபோனார். அவர் ரூலுக்கு விரோதமில்லையென்றுசொல்லிவிட்டார். இப்போது சேலத்தில் ம-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணியபிள்ளை அவர்கள் பிரசங்கம் செய்கிறார். பாதிரிகள் நாட்டுப்புறத்தவரை ஏமாற்றுவார்கள். அதற்கெல்லாம் பயப்படவேண்டாம் அவர்களை ஒரு பொருளாகவும் மதிக்கவேண்டாம். அம்பட்டன் குப்பையிலிருக்கும் மண்ணும் மயிரும்போல் பைபிலிலுள்ள ஆபாசங்களை வெட்டவெளியாக எடுத்துத் தூற்றுங்கள், கிறிஸ்துமதத்தைப்போன்ற ஆபாச மதம் உலகில் இல்லவே இல்லை. ஆதலால் அவ்வுளவையும் நம்மவர்க்கும் கிறிஸதவர்க்கும் போதியுங்கள். ஆண் சிங்கம்போல் அஞ்சாதீர்கள். சமயாபிமானி.

பத்திராதிபர் தக்ஷிணயாத்திரை.

நிகழும் 1887-ஆம் மே-மீ முதற்தேதி முதல் திருநெல்வேலி ஜில்லாவில் சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராதிபரால் ஓர் யாத்திரை செய்யப்பட்டது. திருநெல்வேலியில் சேர்ந்தவுடன் அவ்விடம் ம-ள-ள-ஸ்ரீ வைக்கில் கிருஷ்ணசாமி ஐயர் வீட்டில் நடந்த ஓர் விவாக மகோற்சவத்திற்காக வந்திருந்த பல சுதேச வித்துவான்களும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும், அநேக ஜமீந்தார்களும், மற்றும் பல தனவான்களும், கனவான்களும் கேட்கும்படி ஓர் உபந்நியாசஞ்செய்யவேண்டுமென ஷை ம-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயரவர்கள் கேட்டுக்கொண்ட பிரகாரம் இந்துகாலேஜில் மேமீ 6-உ வெள்ளிக்கிழமை மாலை ௬-மணி முதல் ௭-மணி வரையில் தந்திரங்களையும், மந்திரசாஸ்திரங்களையுங் குறித்து ஓர் உபந்நியாசஞ் செய்யப்பட்டது. அக்காலத்தில் நவீன கவிசிகாமணியாகிய சுந்தரராஜசாஸ்திரியாரவர்கள் சபையார்களின் வேண்டுகோளின்படி அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்து பிரசங்கத்தைச் சிலாகித்தார். அச்சபையில் வந்திருந்த கொல்லம் ஜட்ஜ் ம-ள-ள-ஸ்ரீ சீதாராமய்யரவர்கள் ஸம்ஸ்கிருதபாஷையில் சுபாவத்தில் நல்ல வியுற்பத்தியுடையவராதலால் தாம் அப்பிரசங்கத்தைக் கேட்டு மிகத் திருப்தியடைந்ததாகத் தமது அபிப்பிராயத்தைவெளியிட்டார். தமிழ்ப்பாஷையில் சிறந்த வித்துவானும் எக்காலத்தும் அவ்விதப் புலவர் சங்கத்தை நடாத்துந்தலைவருமான ம-ள-ள-ஸ்ரீ வீரகேரளம்புதூரென வழங்கும் ஊற்றுமலை ஜமீந்தாரவர்கள் தமிழ்நடையைக்குறித்து மிக வியந்து பேசினார். ம-ள-ள-ஸ்ரீ டி. கலெக்டர் முருகேசமுதலியாரவர்கள் அப்பிரசங்கத்திலெழுப்பிய வெகு சாதுரியமான ஆக்ஷேபத்திற்கு உடனே விடையளிப்பக் கேட்டு மனமகிழ்ந்து தமது சுதேசபாஷாபிமானத்தை வெளியிட்டார். மேலும் சபையில் கூடியிருந்த அநேக கனவான்கள் தத்தமபிப்பிராயங்களை வெளியிட மிகச் சந்தோஷத்துடன் சபை கலைந்தது. பின்பு அங்குநின்றும் புறப்பட்டுத் திருக்குற்றாலத்தில் ஸ்ரீதிருக்கூடாசலேசுரரைத் தரிசிக்கச் சென்றபொழுது, அதனருகிலுள்ள தென்காசியென்னுமூரில் 8-உ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீலோகநாயகியம்மைகோயிற் சந்நிதியில், சுமார் மாலை 5-மணிக்கு ஓர் பெருங்கூட்டங் கூடியது. இதில் ஷையூர் தாசில்தார் சிவராமய்யரவர்கள், சிரஸ்ததாரவர்கள், மற்றமுள்ள உள்ளூர் கனவான்களும் கீழைப்புலியூர் செங்கோட்டை முதலியவிடங்களிலிருந்து பல வித்துவான்களும் வந்திருந்தார்கள். அவ்விடத்தில் நமது இந்துமதம் அநாதியென்றும், அதற்காகத் தற்காலத்தில் கிறிஸ்தவர் நாஸ்திகர் முதலாயினோர் செய்துவருங் கெடுதியையும் அதையொழித்து நாம் முன்னுக்கு வரும் வழியையும் குறித்து மூன்றுமணிநேரம் உபந்நியாசஞ் செய்யப்பட்டது. இவ்வித உபந்நியாசம் அவ்வூரிலிதுவரையில் நடந்ததேயில்லையெனக் கொண்டாடினார்கள். பின்பு ௧௧-உ புதன்கிழமை மாலை கடயமென்னுங்கிராமத்தில் ஓர் சபையின்பிரயோசனத்தையும், பத்திரிகையின் பிரயோசனத்தையும் குறித்து ஓர் உபந்நியாசம் அதிசீக்கிரத்தில் வெகு விஷயங்களுடன் முடிக்கப்பட்டது. பிறகு மறுதினம் பத்தமடை யென்னும் கிராமத்தில் சாயங்காலம் 6-மணி தொடங்கி இரவு 9-மணிவரையில் சாங்கியம், யோகம், பாசுபதம், பாஞ்சராத்திரம், வேதம் இம்மதங்களின் உண்மையும் அவைகளில் ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தமும் தற்காலம் அம்மதஸ்தர்கள் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் விரோதங்களுக்கு மூலசாஸ்திரங்கள் இடமில்லையென்றும், அத்வைதம் சமரஸமானதென்றும் அச்சபையில் வந்திருந்த பலசுதேச பண்டிதர்களை நோக்கி வெகுகாலம் ஸம்ஸ்கிருதத்திலும் சிறிது தமிழிலும் உபந்நியசிக்கப்பட்டது. திருநெல்வேலி டி. கோ. வைக்கில் ம-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயரவர்கள் சென்னை இந்து ட்ராக்ட் ஸொஸைட்டியைக் குறித்துச் சிறிதுபேசி அவர்களாலனுப்பட்ட ட்ராக்டுகளை பலருக்குக்கொடுத்தார்கள். பிறகு அவ்விடம் விட்டு 16-உ திங்கட்கிழமை தினம் ஸ்ரீவைகுண்டம் சென்று, ஆங்கு வெகு சீக்கிரத்திற்குள் கூடிய ஓர் கூட்டத்தில் ஸம்ஸ்கிருதபாஷையின் பெருமையையும் அதை முன்னுக்குக் கொண்டுவரவேண்டியதையும் பற்றி ஓர் உபந்நியாசம் செய்யப்பட்டது. மறுதினம் திருச்செந்தூர் ஸ்ரீசுப்பிரமணியர் திவ்விய சந்நிதியின் தெரிசனஞ்செய்து அவ்விடத்திலுள்ள பலரபிப்பிராயங்களை யனுசரித்து ஓர் உபந்நியாசம் நடத்தப்பட்டது. அதன் விஷயம் தற்காலம் நாஸ்திகர் முற்காலம் நாஸ்திகர் இவ்விருவர்களுக்குமுள்ள பேதம், இவ்விருவகை நாஸ்திகங்களையும் ஒழிக்கவேண்டிய வழிகள், அத்வைதமதத்தின் பெருமை, மற்றமதங்களின் அவிரோதம் முதலியன. மறுதினம் ௧௮-உ புதன்கிழமை 2-மணி முதல் 4-மணிவரையில் குலசேகரப்பட்டணத்தில் இந்து ஆங்கிலேய பாடசாலையில் சைவமதத்தைப் பற்றியும், இந்துக்களின் ஆசாரத்தைப் பற்றியும் ஓர் உபந்நியாசமும் படிக்கும் குழந்தைகளுக்கு நீதி போதனமும் செய்யப்பட்டது. அதேதினம் இரவு 8-மணிக்கு ஆரம்பித்து ௧௧-மணிவரையில் திருச்செந்தூர் தேவாலயத்தின் முகப்பிற் கூடிய ஒரு பெருஞ் சமாஜத்தில் சைவசித்தாந்தத்தைப்பற்றி ஓர் பெரிய உபந்நியாசம் செய்யப்பட்டது.

௧௯-உ கருங்குளமென்னும் ஓர் பெரிய அக்கிரகாரத்தில் வர்த்திக்கி பகல் ௨-மணிக்கு பூர்வாசாரம், குருபக்தி முதலியவைகளைக் குறித்து ஓர் பெரிய உபந்நியாசம் செய்யப்பட்டது. ௨௧-உ சனிக்கிழமை மாலை திருநெல்வேலி ஸ்ரீகாந்திமதியம்மன் சந்நிதி ஊஞ்சல்மண்டபத்தில் அநேக கனவான்கள் கூடிய ஓர் சங்கத்தில் வருணாச்சிரமதருமங்களைப்பற்றி மேற்றிசையார்கொண்ட கொள்கைகளையும் நமது கொள்கையிலுள்ள நியாயத்தையும் விரிவாயெடுத்துபந்நியசித்து சிலர் அதிலெழுப்பிய ஆக்ஷேபங்களுக்கும் சமாதானங்கூறப்பட்டது. தென்காசி, கடயம் தவிர மற்ற ஒவ்வொரு கிராமங்களிலும் நடந்த பிரசங்கத்திலும் இந்து ட்ராக்ட்டின் உத்தேசத்தை பலவிதம் புகழ்ந்துபேசி, திருநெல்வேலி டி. கோ. வக்கீல் ம-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணசுவாமிஐயரவர்கள் தாமே பலருக்கும் ட்ராக்டைக்குறித்தும் மதாபிமானவிஷயங்களைக்குறித்தும் போதித்துவந்தார்கள். ௨௫-உ யுடன் தக்ஷிணயாத்திரை முடிந்தது.

சர்வஜித்து வருஷத்திய

ரிப்பன் பாக்கெட்பஞ்சாங்கம்

பிரதி ௧-க்கு விலை- அணா-6-தபால்சார்ஜ்-அணா-1 10க்கு 1ம், 25க்கு 3ம், 50க்கு 7ம், 100-க்கு 14ம் கமிஷனுக்குமேலே கொடுக்கப்படும்.

இந்த ஏற்பாடு வாங்கி விற்பவர்க்காக ஏற்படுத்தியது

அச்சிட்டிருக்கும் புத்தகங்கள்.

மாதர் நீதி-க்கு அணா 6- தபால்சார்ஜ் அணா- ௧- மனுமுறைகண்டவாசகம்-க்கு அணா 4- தபால் சார்ஜ் அணா அரை இது சிதம்பரம் இராமலிங்கசுவாமிகளால் எளிய வசன நடையில் இயற்றியது- (இது சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராதிபரிடமும் கிடைக்கும்)

வேண்டியவர்கள் சென்னை முத்தியாலுபேட்டைத் தம்புசெட்டிவீதி 36-வது நெ- மதராஸ் ரிப்பன்பிரஸ் மானேஜர் கு- சடையாண்டிச் செட்டியார் பேருக்குப் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்- பதில் வேண்டுவோர் அரை அணாலேபில் அனுப்ப வேண்டும்-

கு- சடையாண்டிசெட்டியார், மானேஜர்.

விளம்பரம்.

இந்து மதங்களுக்குரிய புஸ்தகங்களின் மிகத் தாழ்வான விற்பனை.

புஸ்தகங்களின் பெயர்.	குறைந்த விலை.			முன்விலை.		
	ரூ	அ	ப	ரூ	அ	ப
சாந்தோக்கியோபநிஷத்துகள் அத்வைத விசிஷ்டாத்வைதபாஷிய ஸஹிதம். (தெலுங்கு)	2	6	,,	3	8	,,
வேதாந்த தீபம். ஷை	1	6	,,	2	,,	,,
யதீந்திரமத தீபிகை ஷை	,,	5	,,	,,	8	,,
பகவத்விஷயங்கள் 2-9 பத்துகள் பிரதி (தெலுங்கு) ...	4	12	,,	7	,,	,,
,, 3-5-7-10 ,, ,, ஷை ...	5	6	,,	8	,,	,,
,, 4-6 ,, ,, ஷை ...	6	4	,,	9	,,	,,
,, 8 ,, ,, ஷை ...	4	,,	,,	6	,,	,,
கிரந்த ஏழு உபநிஷத்துகள் அத்வைத விசிஷ்டாத்த பாஷிய ஸஹிதம்.	6	12	,,	10	,,	,,
திருவாய்மொழி பிரதிபதம்.	2	11	,,	4	,,	,,
திருச்சந்த விருத்தம்	,,	2	,,	,,	4	,,

பச்சையப்ப டிரஸ்டீஸ் ஆபீஸ்
பட்டணம் 1887-ளு ஜனவரிமீ 28.உ

இ. பாலசுந்தரமுதலியார்
காரியதரிசி.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]